




# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06








மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -320




## இலங்கையில் இடம்பெறும் நிழல் யுத்தமும் அதற்கு ஆதரவு அளிக்கும் தமிழின துரோகிகளும்



## சமஷ்டி இல்லையெனில் தமிழினம் ஆயுதம் ஏந்திப் போராடுவதை விட வேறு வழியில்லை



## 'கொரோனாவும், போராடும் அரசும்' மக்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# சமஷ்டி இல்லையேல் தமிழினம் ஆயுதம் ஏந்திப்போராடுவதை விட வேறு வழியில்லை



ஜனநாயகத்தை அடியொற்றி மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்சி முறைகளில் ஒன்று சமஷ்டியாகும். அதிகாரம் ஒரு நாட்டின் மத்திய அரசுக்கும் அங்கத்துவ அரசுகளுக்கும் இடையே பிரிக்கப்பட்டுப் பிரயோகிக்கப்படுவது சமஷ்டியாகும். இது கனடா. பிரேசில். பெல்ஜியம். ஸ்பெயின். சுவிஸ்லாந்து. அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைமுறையில் இருந்து வருகின்றது. அந்த வகையில் இலங்கைத்தீவு பல்லின மக்களை கொண்ட ஒரு நாடாக காணப்படுகின்றது. அதில் கடந்த காலத்தில் தமது உரிமைகளுக்காக போராடி மிகவும் பாதிப்படைந்த ரீதியில் காணப்படுவது தமிழ் மக்களேயாவர். இலங்கையில் 1956ம் ஆண்டுக்கு பின் உச்சம் பெற்ற அரசியல் மோதல்கள் வலுப்பெற்று 1983ம் ஆண்டுக்கு பின் எழுச்சி பெற்று ஆயுத போராட்டமாக வளர்ச்சி பெற்றது. இதற்கான காரணத்தை ஒரே வரிகளில் கூறுவதானால் அதிகாரம் என்பது பெரும்பான்மை சமூகத்தின் கைகளிலேயே அல்லது அவை தமிழர்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததேயாகும்.

இலங்கையில் ஆட்சிபீடம் ஏறும் சிங்கள ஆட்சியாளர்கள் மனநிலை காலம் காலமாக தமிழர்களை அடிமைப்படுத்துவதையே நோக்கமாக கொண்டிருந்தது. இதன் அடிப்படையில் தான் தமிழ் மக்களுக்கும் சிங்கள அதிகார வர்க்கத்துக்கும் இடையில் குரோத மனப்பான்மை வளர்ந்தது. இது அறுபது வருடம் கொண்ட தீராத பகையாக வளர்ந்த உணர்வாகும். இதனை இன்று மறுதலிக்க முடியாது. இதன் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் தமது தீர்வை பெற வேண்டும் என சிந்திக்கிறார்கள். மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டு விடுவோம் என அச்சம் கொள்கிறார்கள். இதனால் மற்றவர் பார்வையில் இனவாதிகளாக மாற்றப்படுகிறார்கள். தமது இனத்திற்காக குறைந்தபட்ச தீர்வாக தருவதை வாங்குவதற்கு பதிலாக இந்த நாட்டின் பூர்வீகத்தின் பங்காளிகள் என்பதால் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள துடிக்கிறார்கள். இதன் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி பற்றி தமிழ் மக்கள் இன்று பேசுகிறார்கள். மிகவும் சிக்கலான இன அமைப்பை பெற்றுவிட்ட இன்றைய வடகிழக்கு அல்லது நாட்டுக்குள் சமஷ்டி எப்படி சாத்தியம் என்பது பற்றியோ. சிங்கள அதிகார வர்க்கம் தமிழர்களை அடிமைப்படுத்தியது போல தமிழர்கள் யாரையும் அடிமைப்படுத்த கூடாது என்ற எண்ணமோ தற்போது வரை தமிழ் மக்களுக்கு எழவில்லை. அதுவே 1947ல் கோரப்பட்ட அதாவது 70 வருடங்களுக்கு முன் தமிழருக்கு தந்தை செல்வநாயகம் முன்மொழிந்த சமஷ்டி தீர்வாகும். இதனை விட முக்கியமானது அதனை இப்போது தான் தமிழ் தலைமைகள் ஆய்வு செய்கின்றமையாகும். இன்றைய சிக்கலான முறைக்குள் சமஷ்டி தீர்வை வழங்க நாட்டின் நிலைமை இடமளிக்க போவதில்லை. தமிழ் தலைவர்கள் அந்த தீர்வை பெரும் காலத்தை கடந்து வந்துவிட்டார்கள். இன்று பேரம் பேசும் சக்தி எதுவும் தமிழர்களுக்கு இல்லை. சிங்கள ஆட்சியாளர்கள் தீர்மானிக்கும் அதிகார பகிர்வே சாத்தியமாக காணப்படுகிறது.

70 வருடத்திற்கு முன்னர் பழமை வாய்ந்த ஓர் தீர்வாக அப்போது தமிழர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் இன்று குடியியல் பரம்பல் ஏது நிலைகள் மாற்றம் கண்டுவிட்டது. பூர்வீக தமிழர் நிலங்கள் பல்லின சமுகத்தின் வாழ்வியலை இன்று பிரதிபலிக்கிறது. திட்டமிட்டு தமிழர்கள் கலைக்கப்பட்டு நிலங்கள் அபகரிக்கப்பட்டாலும் மற்ற சமூகங்களின் இருப்பை தகர்க்க முடியாது.

இன்றுவரை திரும்ப திரும்ப நாட்டின் ஆட்சியாளர்கள் குறிப்பிடுவது ஒற்றையாட்சியை அல்லது அதிகார பகிர்வு பற்றியே! அதை தவறென்றும் எடுத்தியம்ப முடியாது. ஏனெனில் அப்போதைய சிங்கள ஆட்சியாளர்கள் விட்ட தவறே தமிழ் மக்கள் ஒற்றையாட்சி பற்றிய தவறான நிலைப்பாட்டிற்கு வருவதற்கு காரணமாக அமைந்தது. இலங்கை என்பது எங்கள் நாடு என்ற சிந்தனை அற்று போவதற்கு காரணம். ஆனால் ஆரம்ப தலைவர்களாக இருந்த இராமநாதன். அருணாசலம் போன்ற தமிழ் தலைவர்கள் இலங்கை என்ற தேச பக்தியை தமிழர்களுக்கு விதைத்தனர். ஆனால் அதற்கான முட்டுகட்டைகள் தீவிர போக்கு கொண்ட சிங்கள பௌத்த மேலாதிக்க வாதத்தை முன்னிறுத்திய பண்டாரநாயக்கா போன்ற தலைவர்கள் தமது அரசியல் வாழ்வை தக்கவைக்க. பெரும்பான்மை சமுகத்தை திருப்திபடுத்த. தேவையற்ற முறையில் வாக்குறுதிகளை வழங்கி. இரு சமூகங்களிடையே மோதலை தோற்றுவித்து தமிழர்களின் நல்லெண்ணங்களை கலைத்தனர். திட்டமிட்டு தமிழர்களுக்கான அதிகாரங்களை பறித்தனர். அத்தகைய அன்றைய ஆட்சி முதல் இன்றுவரை இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான சம அந்தஸ்து இதுவரை கிடைக்கவில்லை. அதற்காக முட்டுக்கட்டைகளை போடுவதற்கு மட்டுமே சிங்கள ஆட்சியாளர்கள் முனைப்பு காட்டுகின்றனர். தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி ஆட்சியை கோருகிறது. இக்கோரிக்கையை பற்றி ஆய்வு செய்யாமல் தற்போதைய ஜனாதிபதி. பிரதமர் மற்றும் முக்கிய பதவியில் வகிப்பவர்கள் அனைவரும் வெளிப்படையாக நிராகரித்து விட்டனர். அவர்கள் சமஷ்டி வழங்க முடியாது என்ற சமிக்ஞையை தெளிவாக சொல்லிவிட்டார்கள். எனவே தான் மீண்டும் தமிழர்களுக்குள் அதிகார போட்டி ஏற்படப்போகிறது. அது சமஷ்டி என்ற சொல்லின் மூலம் மீண்டும் ஏற்படுத்தப்பட போகின்றது. அதை எவ்வளவு காலம் சென்றாலும் ஆட்சியாளர்கள் ஏற்று கொள்ளவும் போவதில்லை. அதை ஏற்று கொள்வதற்கான மூலோபாயங்கள் இந்த நாட்டுக்குள்ளும் காணப்படவில்லை. விழலுக்கு இறைத்த நீராய் மட்டுமே தந்தை செல்வாவின் சமஷ்டி என்ற பதம் தமிழர்களின் கையில் இனி வரும் காலங்களில் எல்லாம் இருக்கப் போகிறது! ஆட்சியின் அதிகாரத்தில் உள்ளவர்களின் நிராகரிப்பை இனவாதம் கொண்டு தமிழர்கள் இனிவரும் காலங்களில் நோக்குவது தவறானது. சமஷ்டி தீர்வை வழங்க இலங்கையின் பல்லின அமைப்பு முறை. இன பரம்பல் முறை இடம் கொடுக்குமா என்பது பற்றிய அழமான ஆய்வுகள் தேவை.

புதிய அரசியல் தீர்வை பெறுவது தொடர்பாக திறந்த உரையாடல்கள் தமிழ் தலைமைகளினால் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆட்சி பீடத்தில் உள்ளவர்களுடன் எதிர்கட்சியாய் இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு சமஷ்டி தீர்வு யோசனைகளை பற்றி திறந்த மனதுடன் பேசியிருக்கவேண்டும். வெறுமனே தமிழ் மக்கள் மத்தியில் பேசி விட்டு இதுதான் தீர்வு என இடித்துரைப்பது உசிதமானதன்று. கலந்துரையாடல்கள். பேச்சுவார்த்தைகள் எல்லாம் சிங்கள பெரும்பான்மை நோக்கி தமிழ் தேசிய கூட்டமைப்பு நகர்த்தி செல்லவேண்டும். தெற்கில். சமஷ்டி கேட்பவர்களை இனவாத தமிழர்களாய் நோக்கும் தென்னிலங்கை சமூகத்துக்கும். சமஷ்டி இலங்கைக்கு பொருத்தமில்லை என்ற சமுக விஞ்ஞான கோட்பாட்டுக்கும் பதிலளிக்கும் மனநிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லை. உண்மையாகவே இலங்கையில் சமஷ்டி தீர்வை வகுப்பதற்கான ஏது நிலைகள் இல்லை. ஆனால் கடந்தகால காழ்ப்புணர்வுகள். ஏமாற்றங்கள். அழிவுகளை கருத்தில் கொண்டு தனித்து வாழ சமஷ்டி கேட்பது இன்னும் பல இனக்குழுமங்கள் குறிப்பாக முஸ்லிம் சமுகத்தையும் தூண்டும். அதன் பின் வடக்கு கிழக்கில் அல்லது கிழக்கில் தனி இன்னுமொரு சுயாட்சி பிரதேசத்தை அது ஊக்கிவிக்கும். அது மீண்டும் ஒரு பிரிவினைக்கு வழிகாட்டும். எனவே தான் ஆட்சியாளர்கள் அச்சம் எதிர் காலத்தை நோக்கி நகர்கிறது.

இலங்கைக்குள் பார்வையை செலுத்தும் போது தமிழர் செறிந்து வாழும் பகுதி. சிங்களவர் செறிந்து வாழும் பகுதி. இந்திய வம்சாவழி மக்கள் செறிந்து வாழும் பகுதி. தமிழர் பகுதிக்குள் செறிந்து வாழும் முஸ்லிம்கள். பெரும்பான்மை சிங்கள மக்கள் வாழ்கின்ற பகுதிக்குள் செறிந்து வாழும் தமிழ். முஸ்லிம் மக்கள் என ஒரு சிக்கலான வாழ்வியலே காணப்படுகிறது. இங்கு தமிழர்கள் - சிங்களவர்கள் என தீர்வை வழங்க முடியாத நிலையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமஷ்டி ஆட்சிமுறையானது பிரிவினை வாதத்தை நோக்கி செல்லும் அல்லது ஊக்குவிக்கும் முக்கிய காரணியாக உள்ளது. இதன் அடிப்படையில் தமிழருக்கு என்றோ வடக்கு கிழக்குக்கு என்றோ சமஷ்டி தீர்வை முன்வைக்க ஆட்சியாளர்கள் விரும்ப மாட்டார்கள். குறிப்பாக சொன்னால் நாம் இலங்கையர் என்ற எண்ணம் ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்படுவதை சமஷ்டி தடுத்துவிடும். உதாரணமாக நாட்டை நாம் பிரதிநிதித்துவம் செய்யாமல் மாகாணங்களை முதன்மையாக கொண்டு தமிழர். சிங்களவர். முஸ்லீம் என்ற எண்ணத்தை விதைத்துவிடும் என்ற ஆழமான பார்வை சிங்கள ஆட்சியாளர்களிடம் உண்டு. இதனடிப்படையில் சமஷ்டி என்பது இலங்கைக்கு எட்டாத தீர்வாக சொல்கிறார்கள்.

தமிழருக்கான சுயநிர்ணய உரிமையை வழங்குதல். பிரதேச சுயாட்சி வழங்குதல் என்பன பெரும்பான்மை சிங்கள மக்களை பொறுத்தவரை கசப்பான விடயமாகும். இங்கு ஒரு நகைப்புக்கான விடயம் என்னவெனில் தற்போதைய அரசியல் யாப்பின் 13வது திருத்தசட்டத்தால் வழங்கப்பட்ட காணி. மற்றும் பொலிஸ் அதிகாரத்தையேனும் இதுவரை வழங்க மறுத்த ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு இனிப்பான சமஷ்டியை வழங்குவார்களா? என்பதை மறந்து. சமஷ்டியை முன்கொண்டு செல்வது பொறுத்தப்பாடுகள் அற்றதே!

தற்போது சமஷ்டியை நடைமுறைப் படுத்தும் நாடுகளை ஆய்வு செய்தால் அங்கு தீவிரவாதம் மிக்க அல்லது இனவாதம் மிக்க பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை எல்லாம் ஒரே வகையானது என்று கூற முடியாது. எங்கெல்லாம் பிராந்திய மேலாதிக்கம் வலுப்பெறுகிறதோ அங்கெல்லாம் மத்திய அரசுடன் மோதல் தீவிரம் பெறுகிறது. இன்றைய யதார்த்தத்தில் கிழக்கு மாகாண ஆட்சிக்கும் வடக்கு மாகாண ஆட்சிக்கு இடையே ஒப்பீட்டை மேற்கொள்ளலாம். கடந்த காலங்களில் மத்திய அரசுடன் தீவிரமாக போரிட்ட வடக்கு ஜனநாயகமும் மத்திய அரசுடன் இணங்கி ஒரு அலகாக செயற்பட்ட கிழக்கு மாகாண ஆட்சியையும் நினைவில் கொள்ள முடியும். கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை மூன்று சமூகங்களின் பரம்பல் சமஷ்டிக்கு வளைந்து கொடுக்கக்கூடிய சாத்திய கூறுகள் அற்ற நிலையிலேயே உள்ளது. இங்கு சமஷ்டியை வழங்கினால் கிழக்கு மாகாணம் எதிர்காலத்தில் மூன்று சமூகங்களின் உச்சமான தீவிர மோதலை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இன்று உலகில் அனைத்து நாடுகளும் காலனித்துவ அல்லது குடியேற்றவாத நாடுகளாகவே இருந்துள்ளன. பல நாடுகளில் மக்கள் தாமாக புலம்பெயர்ந்து குடியேறியவர்களே. அல்லது நாடுகள் தமது மக்களை காலனித்துவ ஆட்சியில் குடியேற்றின. அதேபோல அடிமைகளாகவும் கொண்டு செல்லப்பட்டனர். இந்த மக்களே பல சமூகங்களாக இன்று உலகில் இருக்கின்றனர். இன்று பல்வேறு நெருக்கடிகள் இனங்களிடையே நாடுகளுக்குள் நடைபெறுகின்றன. அது ஆசியா என்றோ ஐரோப்பா ஆபிரிக்கா என்றோ ஒற்றைச் சொல்லில் அடக்கி விட முடியாது. எனவே அந்த நெருக்கடிகளுக்கு எல்லாம் பொதுவாக தீர்வை வழங்க வேண்டும். ஆனால் அந்த தீர்வு நீருபூத்த நெருப்பாய் வளர்வதற்கு இடமளிக்கக்கூடாது.

07ஆம் பக்கம் பார்க்க...

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனா இரண்டாம் அலையும் அதை எதிர்த்துப் போராடத் துணியும் மக்களும்

கொரோனா இரண்டாம் அலை மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் உருவாகி நாடு முழுவதும் கோரத்தாண்டவம் ஆடி வருகின்றது. இதுவரை பன்னிரெண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் இந் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டும் சுமார் 30 பேர் வரையில் மரணமடைந்திருக்கின்றனர். தற்போது மேல் மாகாணம் முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டுள்ளது. இப்படியிருக்க நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையுடன் பேலியகொட மீன் சந்தை கொத்தனியும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இந்நிலையில் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்திக்கத் தொடங்கியுள்ளனர். மீனவ சமூகம் மிக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து தடைப்பட்டதால் வியாபாரங்களுக்கு செல்வோர் தொழில் இழந்துள்ளனர். உணவக உரிமையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். உணவகங்களில் அமர்ந்துண்ணும் முறை தடைசெய்யப்பட்டு பொதிகள் மூலம் அனுமதி வழங்கப்பட்டமையினால் மிகப்பெரும் நெருக்கடிகளை உணவு உரிமையாளர்கள் சந்தித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி தனியார் பஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது தமிழ் மக்களின் பண்டிகையான தீபாவளி காலமானதால் புடைவைக் கடைகளில் வியாபாரம் மிகச் சிறப்பாக இருக்கும். ஆனால் கொரோனாவினால் வியாபாரமின்றி புடைவையகங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றது. மரக்கறி ஏற்றுமதிகள் முடங்கியுள்ளது. தம்புள்ளமிகப்பெரும்விவசாயசந்தையில் பல இலட்சம் பெறுமதியான மரக்கறிகள் வாங்குவாரின்றி தேங்கிக்கிடப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். ஒட்டுமொத்தத்தில் சகல தொழில்களும் பாதிப்படைந்து பட்டினிச்சாவை நோக்கி நாடு நகர்வது போலத் தோன்றுகிறது. தற்போது அரச தரப்பும் சுகாதார தரப்பும் கொரோனா இரண்டாம் அலையுடன் வாழப் பழகிக்கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளமையானது மிகப் பாரிய உயிரிழப்புக்களும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தொற்றுநோயியல் தடுப்புப் பிரிவு எச்சரிக்கை செய்கிறது. அரசு நாட்டை முற்றாக முடக்க முடியாமலும் அதேநேரம் நோயைக் கட்டுப்படுத்த முடியாமலும் திணறி வருகின்றது. நாட்டை முற்றாக முடக்கினால் பொருளாதார ரீதியாக மிகப்பெரும் பின்னடைவை சந்திக்கவேண்டி வரும் எனவும் அரசு கூறுகிறது. ஆகவே மக்கள் இந்த கொரோனாவை எதிர்த்துப் போராட வேண்டிய காலமிது. அரசும் சுகாதாரப் பிரிவும் கூறும் அறிவுரைகளை மதித்து இந்நோயை இந்நாட்டில் இருந்து விரட்டவேண்டுமேயொழிய முடங்கி இனி இருப்பதில் பயனில்லை. ஒரு காலத்தில் மலேரியா கொள்ளை நோயை எவ்வாறு போராடி வெற்றி கொண்டோமோ, டெங்கு நோயை கட்டுப்பாட்டுக்குள் எவ்வாறு கொண்டு வந்தோமோ இந்நோயையும் எம்மால் விரட்ட முடியும் என நம்பிக்கை கொள்வோம். சுகாதார நெறிமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுவோம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**123**

அங்கே சத்திர சிகிச்சை நிபுணர்களும் ஏனைய நிபுணர்களும், இருக்க வேண்டும். இம் மருத்துவமனையில் காயமடைந்தவனதுஉயிரைக்காக்க அல்லது அவனைச் சுகதேகியாக்க அவசியம் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென்ற முடிவை மருத்துவர்கள் எடுப்பார்களானால் அவன் கடின சத்திர சிகிச்சைக்குள்ளாகின்றான்.



இந்த மருத்துவமனை கெரில்லா இராணுவத்தின் இரண்டாவது பிரிவில் அமைந்திருக்கின்றது. மூன்றாவது பிரிவினது வலயத்தில் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் பிரதேச மக்களுக்கு ஆபத்தைத் தருகின்ற நோய்களின் காரணத்தையும் அவற்றின் இயல்புகளையும் ஆராய்வதற்கான நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட நிலையான மருத்துவமனைகள் உருவாக்கப்படுகின்றன. கெரில்லாக்களின் நிலையான வாழ்க்கை முறைக்கமைவான இந்த மருத்துவமனைகள் நோய் தீர்க்கின்ற அமைப்பாக விளங்குவதோடு மாத்திரமன்றி குறித்த பிரதேசத்தின் உள்ளூர் மக்களின் பூரணத் தொடர்போடு வெவ்வேறு வகையான மருத்துவ சுகாதார நடவடிக்கைகளையும் மேற் கொள்கின்றன. உள்ளூர் நிர்வாகத்தின் சாத்தியங்களைப் பொறுத்து மூன்றாவது பிரிவின் மருத்துவமனைகள் மருத்துவ உபகரணங்கள் சிலவற்றைக் கொண்டிருக்கலாம். அவ்வுபகரணங்களே துல்லிய நோய் நிர்ணயத்தைக் கணிக்க உதவுகின்றன.

எடுத்துக்காட்டாக வெவ்வேறு வகையான இரசாயன கூடங்கள் எக்ஸ்ரே பிடிக்கும் கூடங்கள் போன்றனவே அவையாகும். மருத்துவனிடம் உதவியாளர்கள் இருப்பார்கள். குறிப்பாக அவர்கள் இளையவர்களாகவும் மருத்துவத்தில் திறமையுள்ளவர்களாகவும் அவசியமான மருத்துவ அறிவுள்ளவர்களாகவும் போதுமான அளவு உடல்வலிமை கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அவர்களிடம் ஆயுதங்கள் இருக்காது. ஏனெனில் அவை மருத்துவப் பணியாளர்கட்குத் தேவையுமில்லை.

அத்துடன் ஆயுதங்கள் அனைவருக்கும் போதுமானதாகவும் இருக்காது. மருந்துப் பொருட்களைப் பாதுகாத்தல் மற்றும் வழங்குதல், காவுபடுக்கையை அல்லது கமாக்கைக் காவிச்செல்லுதல் போன்ற பணிகள் இவ்வுதவியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவர்களே சமர் நடைபெறும் போது முதலுதவிகளையும்செய்கின்றனர். எதிரியின் பின்புலத்தில் இருக்கின்ற மருத்துவப்பணி அமைப்புக்களுடன் தொடர்புகள் இருக்குமானால் அவசியமான மருந்துப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் சில சமயங்களிலோ அவற்றைச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத் திடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

இருந்தபோதும் இச்சாத்தியப் பாட்டைக் குறிப்பாகப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் கருத்திலெடுத்துக்கொள்ள வேண்டாம். கடினமான நிலைமைகளில் சிறப்பான குழுக்களை அவசியம் ஒழுங்கமைக்க வேண்டும். அவர்கள் அவசியமான மருந்துப் பொருட்களை வேகமாகக் கொண்டுவர உதவுவதுடன் அவற்றை மருத்துவமனைகளுக்கும் மருத்துவ நிலையங்களுக்கும் வநியோகிப்பார்கள். இது தவிர அருகிலுள்ள பிரதேச மருத்துவர்களுடனும் தொடர்புகளைப் பேண வேண்டும். காயமடைந்தவர்களுக்கு மருத்துவம் செய்வதற்குத் தேவையான பொருட்கள் படைப்பிரிவிடம் இல்லாதவிடத்து அவர்களைப் பொறுப்பெடுத்துக் கொள்ளும் பணியை அருகிலுள்ள பிர தேச மருத்துவர்களும் செய்யக்கூடும்.

போராட்டத்தின் இக்காலப்பகுதியில் மருத்துவரின் செயற்பாடு வெவ்வேறானதாக இருக்கலாம். போரின் ஆரம்ப காலத்தில் சமர் நடவடிக்கையில் மருத்துவன் நேர டியாகப் பங்கெடுக்கின்றான். கெரில்லா அமைப்பின் வளர்ச்சிப் போக்கிற்கமைய சில உதவி மருத்துவ அமைப்புக்கள் உருவாக்கப் படுகின்றதுடன், மருத்துவன் தனது பிரதான பணிகளை நேரடியாக மேற்கொள்ளச் செல்கின்றான். பொதுவான சத்திர சிகிச்சையாளர்கள் கெரில்லா இராணுவத்திற்குக் கூடிய பயனைத் தருகின்றனர். படைப்பிரிவில் மயக்க மருந்து இருக்குமானால் நல்லது.

அத்துடன் சத்திர சிகிச்சைகளை ஏதாவதொரு வகை மயக்க மருந்தைப் பயன்படுத்தியும் (லார்கெட்டல் மயக்க வாயு அல்லது பென்டோடல் நைதரசன் மருந்து) மேற்கொள்ளலாம். பொதுவான சத்திர சிகிச்சையாளர்களுடன் எலும்பு தொடர்பான மருத்துவர்களும் அவசியம் இருக்க வேண்டும். ஏனெனில் சமரின் போது கெரில்லாக்களுக்கு ஏதாவது விபத்தால் அல்லது காயத்தால் முறிவுகள் ஏற்படலாம். சாதாரண வைத்தியர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் தமது செயற்பாடுகளை முக்கியமாகக் குடியானவர்களுடனேயே வைத்திருக்கின்றார்கள்.

ஏனெனில் கூடுதலான சமயங்களில் கெரில்லாக்களின் நோய்களைக் கணிப்பது சிரமமல்ல. அத்துடன் இதனைச் சகல மருத்துவர்களும் செய்யலாம். போதிய போசாக்கின்மையால் ஏற்படும் நோய்களைக் குணமாக்குவதே மிகக் கடினமாகும். எதிர்காலத்தில் நன்றாக உபகரண வசதிகளைக் கொண்டுள்ள மருத்துவமனைகள் இருக்குமானால் பரிசோதனைக்கூட ஆராய்ச்சியாளர்களையும் வேலைக்கு அமர்த்தலாம். இதுமிகப்பூரணமான முறையில் வேலைகளைச் செய்வதற்குரிய சந்தர்ப்பத்தைத் தரலாம். சகலதுறை நிபுணத்துவ மருத்துவர்களையும் வேலைக்கமர்த்த வேண்டும். கெரில்லா இராணுவத்திற்கு மிகவும் வெவ்வேறு மருத்துவ சேவகர்கள் தேவைப்படுகின்றனர். அதுவும் குறிப்பாகச் சத்திர சிகிச்சையாளர்கள், பல்வைத்திய நிபுணர்கள் போன்றோர்களாவர். ஆகவே பல்வைத்தியர்களை வேலைக்கு அமர்த்தும் போது அவர்களால் முடியுமென்றால் மிக இலகுவான சாதாரண உபகரணங்களைத் தங்களுடன் எடுத்துக்கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளலாம்.

குறிப்பாக அவர்களது பணிக்கு இன்றியமையாத இலகுவாக எடுத்துச்செல்லக்கூடிய சிறிய பல் சுத்தம் செய்யும் இயந்திரங்கள் போன்றன.

5. நாசவேலை

நாசவேலை - இது கெரில்லாப் போராட்டத்தை மேற்கொள்கின்ற மக்களின் கைகளிலுள்ள விலைமதிப்பிடப்பட முடியாத ஆயுதமாகும். நாசவேலையை ஒழுங்கமைத்தல் - இது கெரில்லாக்களினது செயற்பாட்டின் உள்நாட்டு இரகசிய(மறைமுக)நடவடிக்கையாகும்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**

# வெலிக்கட சிறைச்சாலை படுகொலையின் ஒரு சாட்சியம்

## பேராசிரியர் நித்தியானந்தனின் நேர்காணல்



இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான சாட்சியாக இருப்பவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அந்த நேரத்தில் முதலாவதாக கைது செய்யப்பட்டவரும் இராணுவ முகாம்களுக்குள் வைத்து சித்திரவதை அனுபவித்தவரும். அந்த அனுபவங்களைக் கொண்டவரும் அதுமட்டுமன்றி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வெலிக்கட சிறைச்சாலை மிகவும் பிரபல்யமான இடம். அங்கு தமிழ் அகதிகள் பல நாற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுஅங்கு அடைக்கப்பட்டார்கள். வெலிக்கட சிறைச்சாலையில் இருந்து 1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த மிகப்பெரும் கொடூரமான கொலைகளின் சாட்சியாக இருப்பவரும் மட்டக்களப்பு சிறைச்சாலை உடைப்பிலும் ஓர் சாட்சியாக எங்கள் முன்னிலையில் இருக்கும் பேராசிரியர் நித்தியானந்தனை இந்த நேரத்திலே சந்திக்கின்றோம்: வணக்கம்.

**கேள்வி :-** இந்த 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் எப்பொழுதுமே எங்களது மனதை விட்டு அகலாத ஒன்று. இந்த காலகட்டங்களில் அந்த நேரத்தில் உள்ள உறவுகளை இழந்தவர்களும் மற்றும் நேரடியாக அனுபவப்பட்டவர்களும் அதிலிருந்து புலம்பெயர்ந்து இங்கு வெளிநாடுகளுக்கு வந்தவர்களுமாக எங்கள் தமிழினமே சிதறி சின்னாபின்னமாக போனவொரு ஆண்டு 1983 ஆம் ஆண்டு. அதன் சாட்சியாக நீங்கள் இருக்கின்றீர்கள். இந்த படுகொலைகள் முக்கியமான கேள்வியை எங்களுக்குள் எழுப்புகின்றது. இது திட்டமிட்டு நடத்தப்பட்டதொன்றா? அல்லது எதிர் பார்க்காமல் திடீரென்று ஏற்பட்டதொன்றா? உண்மையில் நடந்தது என்ன?

**பதில் :-** வெலிக்கட சிறைச்சாலையில் என்னோடு கைது செய்யப்பட்ட சக அரசியல் கைதிகள் 53 பேர்களின் படுகொலையை நினைவுகூர்ந்து அவர்களுக்கு இந்த அஞ்சலியை முதலில் நான் செலுத்த விரும்புகின்றேன். இந்த 1983 ஆம் ஆண்டு படுகொலையை ஜெனோசைட் என்று தாராளமாக கூறலாம். அந்த நேரத்திலேயே பியதாஸ என்னுமொரு சிங்கள எழுத்தாளன் தி கொலகோஸ்ட் அன்ட் த ஆப்டர் என்ட் என்ற இன சங்காரம் என்ற அர்த்தத்திலே அந்த காலகட்டத்திலே இதை சிங்கள எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இலங்கையின் இனவாத வரலாற்றை நாம் பார்த்தோமானால் அது எல்லா சந்தர்ப்பத்திலும் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட்டிருப்பதை நாம் காணலாம். 1956 இல் இருந்து நாம் காணமுடியும். ஆனால் 1983 ஆம் ஆண்டு அது திட்டவட்டமான அரசாங்கமே சேர்ந்து இணைந்து செயற்படுத்திய ஒரு இனசங்காரம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த காலகட்டத்திலே ஜே.ஆர். ஜெயவர்தன அவர்கள் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தவர். அவருடைய முழு அமைச்சரவையும் இந்த படுகொலைக்கான ஒரு பின்னணியில் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதை இன்று நாம் மிகவும் துல்லியமாக காண முடிகிறது. அவருடைய அமைச்சரவையில் கைத்தொழில் அமைச்சராக இருந்த சிறில் மெத்தியுவ் ஒரு மிக மோசமான இனவாத பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டிருந்தார். அதை ஒருபோதுமே ஜே.ஆர். ஜெயவர்த்தன தடுத்ததே கிடையாது. டயவொலிக்கல் கொன்ஸ்பிரன்ஸி என்றவொரு நாலை எழுதியிருந்தார். கௌத கொட்டியா என்றவொரு நாலை எழுதியிருந்தார். பல்கலைக் கழகங்களுக்கு திருட்டுத்தனமான வழியிலே எவ்வாறு தமிழர்கள் செல்கின்றார்கள் என்ற ஏடுகளை இவர் அரசாங்க செலவிலே அச்சிட்டு வெளியிட்டிருந்தார். அது மட்டுமல்ல லலித் அத்துலத்முதலி அந்த காலகட்ட அமைச்சரவையிலே வர்த்தக அமைச்சராக இருந்தவர். அத்துடன் காமினி திஸாநாயக்க மகாவலி திட்டத்திற்கு பொறுப்பானவராக இருந்தார். காமினி திஸாநாயக்க யாழ்ப்பாண பொது நூல்நிலையம்எரிக்கப்பட்ட போது அங்கே காமினி திஸாநாயக்க அமைச்சராக அந்த சம்பவம் நடந்த பொழுது முன்னணியில் நின்று அந்த நூலகத்தை எரிப்பதிலே செயற்பட்டிருக்கிறார் என்பது சரித்திர ரீதியான உண்மை. ஒரு முழு அமைச்சு பட்டாளமுமே அதில் செயற்பட்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாகரணில் விக்ரமசிங்கவும் கூட அந்த அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவும் நிலையியல் விவகாரங்களுக்கான அமைச்சராகவும் இருந்திருக்கிறார். பண்டிதரட்ன என்று மிகப்பெரும் அறிவாளி என்று கூறப்படும் ஐக்கிய தேசிய கட்சியினுடைய கட்சித் தலைவராக இருந்திருக்கிறார். ஜே.வி.பி சமரசிங்க கபினட்டினுடைய ஒரு செயலாளராக இருந்திருக்கிறார். போல் பரரா என்ற மிக முக்கியமான ஐக்கிய தேசிய கட்சியினுடைய தூண் என்று கூறப்படும் போல் பரரா கொழும்பு எக்கனமிக் கொமிஸ் என்று கூறப்படும் பொருளாதார ஆணைக்குழுவின் ஒரு பொறுப்பாளராக இருந்திருக்கிறார். இந்த முழு அமைச்சரவையுமே இந்த படுகொலைகளுக்கு பொறுப்புவைக்க வேண்டும். தனது சொந்த பிரஜைகள் மீது கட்டவிழ்த்து விட்ட காட்டுமிராண்டித் தனமான இன வன்முறையினுடைய உச்சக்கட்டமாக 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை நாம் காண முடியும்.

அது உண்மையில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்றது என்றாலும் 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பொது நாலகம் எரிக்கப்பட்டது. இத்தகைய ஒரு இனசங்காரத்திற்கு ஒரு முன் சமிக்ஞையாக, அழிவின் அறிகுறியாகவே அது நடத்தப்பட்டது. இதில் என்ன நடந்தது என்றால் சிங்கப்பூரின் லீ குவானை நான் இங்கு நினைவு கூற விரும்புகின்றேன். அவர் 1940 களிலே சிங்கப்பூர் சுதந்திரம் பெற்றபொழுது அங்கே ஒரு இனக்கலவரம் வெடித்தது. மலாயர்களுக்கும் சீனர்களுக்கும் இடையே நடைபெற்ற ஒரு இனக்கலவரம் 1946, 1948 பகுதிகளில் வெடித்த பொழுது அந்த கலவரத்தில் ஈடுபட்டவர்களை மலாயர்களை மிக கடுமையான ஒருதண்டனைக்கு லீ குவான் உத்தரவிட்டார். அந்த இன வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. அது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இத்தகையதொரு இன நச்சு விதை நாட்டிலே பரவவிடக்கூடாது என்று அந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலே மிக அவதானமாக லீ குவான் செயற்பட்டதன் காரணமாகத் தான் அந்த நாட்டிலே பல்வேறு இனக்குழுக்கள் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழல் உருவானது. ஆனால் இங்கே இந்த 1983 ஆம் ஆண்டிலே முழு இலங்கை அரசாங்கமும் தங்களின் சொந்த பிரஜைகள் தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட ஒரு இனவன்முறையை கொண்டிருக்கிறார்கள். அது அரசு அமைச்சரவை பல்கலைக் கழகங்கள், பத்திரிகைகள், அரச நிறுவனங்கள், சிவில் அமைப்புகள், இராணுவம் பொலிஸ் என்று சகல அமைப்புகளுமே ஒரு இன ரீதியான ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட ஒரு இன வன்முறையை அவர்கள் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். இதுவொரு 1983 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட **யூலை 20 ஆம் திகதியே பத்திரிகை தணிக்கை விதி விதிக்கப்பட்டது.**

எனவே அரசாங்கத்திற்கு தெரிந்திருந்தது ஏதோவொன்று நடக்கப்போகின்றது என்று. ஆனால் ஒரு கிழமையாக அவர்கள் எந்தவிதமான கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்ற பொழுது 24 ஆம் திகதியே ஆரம்பமாகிவிட்டது. நான்கு நாட்களின் பின் அதுவரை ஜே.ஆர். ஜெயவர்த்தன எந்தவிதமான ஒரு அறிக்கையையும் விடவே இல்லை. பல நாற்றுக்கணக்கான தமிழ் மக்கள் குற்றுயிரும் கொலையுயிருமாக கொல்லப்பட்ட அந்த நிகழ்ச்சிக்கு எந்த அமைச்சரும் கண்டனம் கூட தெரிவிக்கவில்லை. நான்கு நாட்களுக்கு பின் ஜே.ஆர். ஜெயவர்த்தன தொலைக்காட்சியிலே வந்த பொழுது அவர் ஆற்றிய உரையின் பின் நச்சுக் கிருமிகள் நாட்டில் பரவியது என்று தான் கூற வேண்டும்.

இந்தசிங்களமக்களின்காடைத்தனத்தை த மாஸ்ட் மூமன்ட் ஒப் த ஜென்ரைட்டி ஒப் சிங்கள பியூப்பிள் என்று அவர் கூறினார். சிங்கள மக்களினுடைய ஒரு வெகுஜன எழுச்சி என்று அதை அவர் வர்ணித்தார். அது மட்டுமல்ல அவர் கூறினார் அதாவது சிங்கள மக்களினுடைய ஒரு கௌரவத்திற்கும் தேசிய பெருமைக்கும் இடமளிக்க வேண்டிய ஒரு தருணம் வந்துவிட்டது என்று அவர் கூறினார்.

இப்படியொரு ஜனாதிபதியாக இருக்குமொரு மனிதன் இவ்வளவு தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நேரத்தில் சிங்கள மக்களின் பொது எழுச்சியாக காடை கூட்டத்தினுடைய வன் செயலை பொது எழுச்சியாக வர்ணிக்கும் ஒரு மனிதன் இந்த இலங்கையினுடைய முழு சரித்திரத்தையுமே இரத்த வெள்ளத்திலே பெருக்கெடுத்து ஓடவிட்ட மிக குரூரமான அரசியல் நிகழ்ச்சியை அவர் செய்திருக்கிறார். சரித்திரத்தின் கதை கேட்ட ஒரு குப்பை மேட்டிற்குரிய ஒரு ஜனாதிபதியாகவே நாம் ஜே. ஆர். ஜெயவர்த்தனவை பார்க்கிறேன்.

**கேள்வி :-** எந்த இடத்திலும் இவ்வாறு ஒரு இனவன்செயல் இன படுகொலையின் மூலமாக ஓர் சமுதாயத்தையே அழித்ததன் பின்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன போன்றவர்கள் எந்த இடத்திலும் இதற்காக மன்னிப்பு கேட்டவில்லை என்று தான் வரலாறு கூறிக்கொண்டிருக்கிறது. அது தொடர்பாக அவர்கள் எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறார்களா?

**பதில்:-** உலகத்திலுள்ள எந்தநாடுகளுமே உன்னதமான நாடுகளோ உன்னதமான மனிதர்களோ என்று இல்லை. ஆனால் ஒரு நாடு நாகரீகமாக நடைபெறுகின்றது என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் தாங்கள் இழைத்த கொடுமைகளை அநீதிகளை அது அநீதிகள் தான் என்று பின்னாள் நீங்கள் அறிய வருகின்ற பொழுது அதை ஏற்றுக்கொள்வது தான் அந்த நாகரீகத்தினுடைய அடையாளம். குற்றமே இழைக்கப்படாத உன்னதமான நாடு உலகத்தில் எங்குமே இல்லை. ஆனால் ஒரு அநியாயம் இழைக்கப்பட்டது என்று தெரிந்த பின் அதை ஏற்றுக்கொள்கின்ற நாகரீகம் தான் மிக முக்கியமானது. அந்த நாகரீகம் ஒருபோதும் ஜே.ஆர்.ஜெயவர்தனவிடம் இருந்ததே இல்லை.

குறிப்பாக 1983ஆம் ஆண்டு வன்முறை எவ்வாறு இடம்பெற்றது என்பது குறித்து அவர் ஆராயப்போவதே கிடையாது. ஆகவே 1983ஆம் ஆண்டு இனவன்முறை இடம்பெற்று 20 ஆண்டுகளின் பின் தான் சந்திரிக்கா குமாரதுங்க ஒரு ஆணைக்குழுவை நியமித்து ஏன் இவ்வாறு நடைபெற்றது என்பது குறித்து ஆராய முற்பட்டார். அதை முற்றுமுழுதான பூரணமான ஆய்வு என்று சொல்லமுடியாவிட்டாலும் அர்த்தத்தில் அது ஒன்று தான் இந்த 1983 வன்முறை குறித்த ஆய்வு. ஜெயவர்த்தன, லலித் அத்துலத் முதலி அவரும் அக்கலவரத்தின் பின் தொலைக்காட்சிக்கு வந்த அவர் கூறினார் சிங்கள மக்கள் லைனில் நின்று உணவுக்காக கஷ்டப்படுவதை பார்க்க தன்னால் சகிக்க முடியவில்லை என்று கண்ணீர் வடித்தார் என்பது ஒரு அபத்தமானதொன்று.

தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அந்த வகையில் எங்கோ சிங்கள மக்கள் சில பேர் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை பெரிதுபடுத்தி காட்டியது எங்களுக்கு தெரியும். எனவே அந்த வகையில் சிங்கள அரசு அந்த இன வன்முறைக்கு பொறுப்பு வகிக்க வேண்டும். இதுவரை அவர்கள் அதற்கு மன்னிப்பு கேட்கவில்லை என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.

தொடரும்...

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மிகப்பெரும் வெற்றியீட்டி தனக்கு எதிராக போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து மகிந்த ராஜபக்ச அவர்கள் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியானார். தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காக இலங்கையில் கடந்த 30 ஆண்டுகாலமாக பல தியாகங்கள் புரிந்து போராடிவரும் நிலையில் மகிந்த ராஜபக்ச அவர்கள் பதவியேற்றவுடன் சீனா, இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியுடன் தமிழினத்துக்காகவும் அவர்களின் உரிமைக்காகவும் போராடிய விடுதலைப்புலிகள் அமைப்பையும் அப்பாவி தமிழ் மக்களையும் இறுதிப்போர் என்னும் கோர யுத்தத்தில் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்தனர். 2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் முற்றாக மௌனிக்கப்பட்டது. இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர், பல ஆயிரம் பேர் காணாமல் போயினார், பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்தன. தாக்குதலினால் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும் பலர் அங்கவீனமானார்கள், பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்தன. ஐஎஸ்.ஐஎஸ் தாக்குதலின் எதிரொலியாக அடுத்து இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் சிறுபான்மையினரின் வாக்குகள் இன்றி சிங்கள மக்களின் வாக்குகளால் அமோக வெற்றிபெற்று ஜனாதிபதியானார். அதன் பின்னர் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் கோட்டபாய ராஜபக்ச அவர்களின் கட்சியான பொதுஜன பெரமுன வெற்றிபெற்று மகிந்த ராஜபக்ச அவர்கள் பிரதமரானார். இத் தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சொல்லும்படியான வெற்றியை பெறவில்லை. அத்துடன் பல ஆண்டு காலமாக வடபகுதி தேர்தல்களில் வெற்றிபெற முடியாமல் இருந்த இலங்கையில் மிகப்பெரும் கட்சியான சுதந்திரக்கட்சி இம்முறை தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றத்துக்கு யாழ் மண்ணில் இருந்து ஒருவர் உறுப்பினராக சென்றுள்ளார். அவர் தான் அங்கஜன் இராமநாதன் அத்துடன் அரசின் பங்காள கட்சியென



# இலங்கையில் இடம் பெறும் ஓர் நிழல் யுத்தமும் அதற்கு ஆதரவு அளிக்கும் தமிழின துரோகிகளும்

இந்த போர் வெற்றியை காட்டி மீண்டும் 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச அவர்கள் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றவுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மிகவேகமாக அபிவிருத்திகளை மேற்கொண்டார். A9 வீதி முற்றாக கார்பட் வீதியாக மாற்றப்பட்டது, கொழும்பு காங்கேசன்துறை புகையிரத பாதை அமைக்கப்பட்டு தடைப்பட்டு இருந்த புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது, அழிவடைந்த மக்களின் வீடுகள் புதிதாக நிர்மானித்து கொடுக்கப்பட்டது, பல வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன என அபிவிருத்தி செயற்திட்டங்கள் மிக வேகமாக இடம்பெற்றன.

இக்காலகட்டங்களில் குடும்ப ஆட்சிமுறையில் ராஜபக்ச அவர்களின் ஆட்சி இடம்பெறுவதை பெரும்பாலான சிங்கள மக்கள் விரும்பவில்லை. இதே வேளை சிறுபான்மை முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறைகளும் பேருவளை, கண்டி போன்றபிரதேசங்களில்தலைவிரித்து ஆடியது. இச்சமயத்தில்2015இல்இடம்பெற்றஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச அவர்களை தோற்கடித்து அவரது சுதந்திரக்கட்சியை சேர்ந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முஸ்லீம் கட்சிகள், தமிழ்கட்சிகள் ஒருங்கிணைப்பில் தேர்தலில் வெற்றி பெற்று நல்லாட்சி என்ற பெயருடன் மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியானார். அத்துடன் அதுவரை காலமும் இடம்பெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களுக்காக 20ஆம் திருத்தச்சட்ட மூலத்தின் சில பகுதிகளை குறைத்து 19ஆம் திருத்தம் சட்டம் உருவாக்கப்பட்டு ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பிரதமருக்கு வழங்கப்பட்டது. நல்லாட்சி அரசிற்கு சிறுபான்மை தமிழ் முஸ்லீம் கட்சிகள் மிகப்பெரும் ஆதரவை வழங்கி ஆட்சி இடம்பெற்றது. இந்த நல்லாட்சி அரசினால் தமிழ் மக்களுக்கு எதுவிதமான பிரயோசனமும் கிடைக்கவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய முண்டு கொடுப்பால் தான் இந்த ஆட்சி இடம்பெற்றது. ஆனால் இந்த முண்டு கொடுப்பில் தமிழ் மக்களுக்கு எதுவிதமான நன்மைகளும் கிடைக்கவில்லை. குறிப்பிட்டு சொல்லப்போனால் நீண்டகாலம் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரைக்கூட விடுதலை செய்யமுடியவில்லை. இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட தமிழர்களின் நிலங்களை அம் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியவில்லை. வடகிழக்கில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. இவ் நல்லாட்சி இடம்பெற்ற காலத்தில் முழு உலகத்தையும் திரும்பி பார்க்க வைத்ததும் இலங்கையில் ஒட்டுமொத்த மக்களையும் கிலி கொள்ள வைத்த ஐஎஸ்.ஐஎஸ்

ஈழமக்கள் ஜனநாயககட்சி ஈ.பி.டீ.பி ஓர் ஆசனத்தை பெற்று டக்ளஸ் தேவானந்தாவும் வவுனியாவில் அக்கட்சியின் மாவட்ட அமைப்பாளரான திலிபனும் பாராளுமன்றம் சென்றுள்ளனர். கிழக்கு மாகாணங்களில் அரசின் ஆதரவுக் கட்சியில் இருந்து வியாழேந்திரன், பிள்ளையான் என இருவர் பாராளுமன்றம் சென்றுள்ளனர்.

இந்நிலையில் 19ஆம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு மீண்டும் 20ஆம் திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அதுவும் வெற்றியடைந்து ஜனாதிபதிக்கு முன்பிருந்த நிறைவேற்று அதிகாரம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. கோட்டபாய ஜனாதிபதியானவுடனேயே நாடு முழுவதும் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு சிவில் நடவடிக்கைகளில் முப்படையினரும் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் கூட இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளனர். அரச உத்தியோகத்தர்களுக்கான நேர்முகத் தேர்வுகளில் கூட இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர். இந்நிலையில் தமிழர் பகுதிகளில் தமது விடிவுக்காக அகிம்சை வழியில் நீர் கூட அருந்தாமல் காந்திய வழியில் இந்திய அரசுக்கு எதிராக 1987ஆம் அண்டு உண்ணா விரதமிருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 33ஆம் நினைவு தினத்தை தமிழ் மக்கள் பூசிக்க நினைக்கும்பொழுது அதற்கு நீதிமன்றம் மூலம் தடை விதித்து **தமிழர்கள் மீது தனது நிழல் போரை ஆரம்பித்தார் கோட்டபாய அவர்கள்** இதே திலீபனின் நினைவேந்தலை 2019ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இதற்கு எதிராக சகல தமிழ் கட்சிகளும் தமக்கிடையில் இருந்த கருத்து வேறுபாடுகளை களைத்து ஓரணியில் இணைந்து வடகிழக்கு பகுதிகளில் ஒருநாள் முடக்கநிலையை அறிவித்து வெற்றிகரமாக கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் இவ் அரசினால் தொல் பொருட்களை கண்டறிதல் என்னும் போர்வையுடன் ஓர் செயலணி உருவாக்கப்பட்டு அது கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பூர்வீக தொன்மையான விடயங்களை இல்லாதொழிக்கும் கபட செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது. அந்த செயலணியில் ஒரு தமிழர்கூட இல்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. மட்டக்களப்பில் ஒரு தேரர் மிகவும் ஆக்ரோசமாக தமிழ் மக்களுக்கு எதிராகவும் ஏனைய சமய குருக்கள், பாதிரியார் போன்றவர்களுடன் அடாவடித்தனமாக செயற்படுவதுடன் தமிழர்களின் பூர்விக சமய தொன்மைசார் விடயங்களை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றார். ஆனால் இதை கண்டு கொள்ளாமல் அரசு மௌனமாக இருப்பது இதற்கு பின்னால் அரசு உள்ளது போன்று தெரிகின்றது. அத்துடன் இவ் அரசு தமிழ் மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தன் அருகில் தனக்கு சார்பாக செயற்படும் சில தமிழ் அடிவருடிகளை பயன்படுத்திவருவது இன்று மட்டுமல்ல கடந்த ஆட்சி காலங்களிலும் இடம்பெற்று வந்த ஓர் துரதிஷ்டவசமான நிலை என்று கூறுவது மிகையாகாது. 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் தமிழர்களுக்கு எதிராக போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என கொக்கரித்த பொழுதும் அதற்கு மகுடம் வைப்பது போல் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அக்கட்சியின் யாழ் மேயராக இருந்த அல்பிட் துரையப்பா என்னும் தமிழர் அரசுடன் இணைந்து தமிழர்களுக்கு துரோகமிழைத்தார். அடுத்து சிறிமா, ஜே.ஆர் மற்றும் பிரேமதாஸ ஆட்சிக்காலங்களில் தமிழ் மக்களின் விடியலுக்கான தளபதியாகவும் தந்தை செல்வநாயகத்திற்கு பின்வந்த மிகப்பெரும் தலைவராகவும் தமிழ் மக்களின் அகிம்சை ரீதியான போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக பரினாமிக்க ஆசி கூறி திலகமிட்டு வழியனுப்பி வைத்த மிகப்பெரும் அரசியல்வாதியான அமிர்தலிங்கம் அவர்கள் இந்தியா றோவின் கையில் சிக்கியது மட்டுமல்லாமல் ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களின் கபட சூழ்ச்சியின் வலைக்குள் விழுந்து தமிழ் மக்களுக்கு எதிரான தீர்மானமொன்றை எடுத்தார்.

அதே வழியில் நீலன் திருச்செல்வம் போன்றோரும் இதில் அகப்பட்டனர். அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக்காலத்தில் தமிழர்களால் என்றும் மறக்கமுடியாத தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை உலக நாடுகளில் பயங்கரவாத தாக்குதல்களாக முத்திரை குத்தவைத்த பெருமைக்குரியவர் கதிர்காமர் ஆவார். இவர் ஒரு யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழர் இவர் மூலமாக இலங்கை அரசு மிகப்பெரும் அனுகூலத்தை பெற்றது. அடுத்து மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எனக்கூறிக்கொண்டு அரசின் ஆட்சியில் பங்கேற்று செயற்படும் ஈ.பி.டீ.பி கட்சியில் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சு பதவி வழங்கப்பட்டு தங்களால் தமிழர்கள் மீது எடுக்கப்படும் எதிரான நிழல் நடவடிக்கைகளுக்கு இவர் மிகவும் அழகாக பயன்படுத்தப்படுகின்றார். அதற்கு பரிசாக தற்பொழுது இன்னுமொரு பதவி வழங்கப்பட்டுள்ளது. அதே போல் சுதந்திரக்கட்சியின்

யாழ் மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் அவர்களுக்கும்பிரதிசபாநாயகர்என்னும்அழகான பதவி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் நல்லாட்சி அரசிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சிலர் அவ்வாட்சிக்கு முண்டுகொடுத்து பாராளுமன்ற அவைத்தலைவர் பதவிபெற்ற வரலாறுகளும் உண்டு. அத்துடன் கம்பரெலிய திட்டத்தின் மூலம் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக பெரும் நிதி வழங்கப்பட்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டது. அவ் அபிவிருத்திகளில் பல மோசடிகள் இடம்பெற்றதாக மக்கள் அதிருப்தி தெரிவித்தமையும் உண்டு. கிழக்கு மாகாணத்திலும் பிள்ளையான், வியாழேந்திரன், கருணா போன்றவர்களை தமது தமிழர்கள் மீது திணிக்கப்பட்டுக்கொண்டு இருக்கும் நிழல் யுத்தத்துக்கு மிக அழகாக பாவிக்கப்படுகின்றனர். கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணி எனக்கூறி தமிழர்களின் பூர்விக தொன்மையான விடயங்களை அழிக்க முற்படும் அரசின் கபடத் தனத்துக்கு மௌனமாக இருந்து ஆதரவளிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை வரலாறுகள் மன்னிக்காது.

**தமிழரின் கையைக் கொண்டே தமிழர்களின் கண்ணை அழகாக குத்திய அரசின் கைங்காரியம் மிகவும் பாராட்டத்தக்கது.** உலக நாடுகளுக்கு் தமிழர்களுக்கும் நல்ல பதவிகள் வழங்கப்பட்டுள்ளது எனவும் இங்கு தமிழர்களுக்கு எதுவித பிரச்சனையும் இல்லை நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக உள்ளோம் என உலக நாடுகளுக்கு மிக அழகாக அரசு காட்டிவருகின்றது.

பௌத்தமத சித்தாந்தத்தை வடகிழக்கில் அதிகப்படுத்தி பௌத்த விகாரைகளை அதிகமாக கட்டி சிங்கள மக்களை அவ்விடங்களில் குடியேற்றி தமிழர்களின் பூர்விக நிலங்களை எல்லாம் அபகரிக்கும் நோக்கில் செயற்படும் இவ் அரசானது சீனாவிடம் தென்பகுதிகளை குத்தகைக்கு விட்டு அதற்கு பிரதியுபகாரமாக **வடகுதியில் அபிவிருத்தி எனக்கூறி சீன நிறுவனங்களை வடபகுதியில் உருவாக்கி வேலைவாய்ப்பு என தமிழ் இளைஞர், யுவதிகளை அதற்குள் உள்வாங்கி காலப்போக்கில் சீனாவின் பௌத்த சமயத்தை இவர்களூடாக தமிழர்களின் பகுதிகளில் புகுத்தி சிங்கள பௌத்த இடமாக வடகிழக்கு பகுதி மாற்றம் பெற்ற பின்னர் சீனா அதனை அரசிடம் கையளிக்கும். இது ஓர் மிகப்பெரும் நிழல் யுத்தமாகும்.** அதற்கு அரசுடன் இணைந்து பணியாற்றும் எம் தமிழினத் தலைவர்கள் என சொல்லித் திரியும் தமிழ் புல்லுரிவிகள் இருக்கும் வரை எம் இனத்தை காப்பாற்ற முடியாது.

தாயகத்தான்

# பயங்கரமாகும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்




இறுதி யுத்தத்தின்போது மிக மோசமான முறையில் மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தன. போர்க்குற்றங்கள் புரியப்பட்டிருந்தன என்ற சர்வதேச குற்றச்சாட்டின் பின்னணியில், யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரான காலப் பகுதியில் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துமாறு இலங்கை அரசு மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளன. இந்த அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக அவ்வப்போது சில நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் அந்த நடவடிக்கைகள் உண்மையிலேயே மனித உரிமைகள் நிலைமைகளை சீர் செய்வதற்கானவை அல்ல என்பதை மனித உரிமை அமைப்புக்களும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் சுட்டிக் காட்டி வந்துள்ளார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில்தான், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதாக உறுதியளித்து, அதற்கான ஆணையை மக்களிடம் இருந்து தேர்தல் மூலமாகப் பெற்ற கடந்த நல்லாட்சிக்கான அரசாங்கமும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. முன்னைய அரசாங்கம் நாட்டில் மனித உரிமைகள் மீறப்படவே இல்லை. மனித உரிமை நிலைமைகள் எப்போதும் போலவே நன்றாக இருக்கின்றது என்று பகிரங்கமாகக் கூறி வந்தது. அதுமட்டுமல்லாமல், மனித உரிமைகள் மீறப்பட்டமைக்கும், இழைக்கப்பட்ட போர்க்குற்றச் செயல்களுக்கும் பொறுப்பு கூறவேண்டும் என்று ஐ.நா மனித உரிமைப் பேரவையினால் பிரேரணைகளின் மூலமாக அழுத்தம் பிரயோகிக்கப்பட்டபோது, அதனைச் செயற்படுத்துவதற்கு பகிரங்கமாகவே கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மறுப்பு தெரிவித்திருந்தது.

ஆனால், நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்ற பின்னர், ஐ.நா மனித உரிமைப் பேரவையில் பொறுப்பு கூறுவதற்காக 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 30/1 பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி, அந்தப் பிரேரணையை முழுமையாக நிறைவேற்றுவதாக உறுதியளித்தது. அந்த உறுதிமொழியில் மனித உரிமைகள் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உத்தரவாதம் முக்கியமானதாகும். மனித உரிமைகளை மீறுவதற்கும், அடிப்படை உரிமைகளைக் காலில் போட்டு நசுக்குவதற்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் துணைபோயுள்ளது என்று சுட்டிக்காட்டி, உரிமைகள் பேணப்படுவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைப் பேரவையும் சர்வதேச நாடுகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் ஒருங்கிணைந்து குரல் கொடுத்திருந்தன. இந்தக் கோரிக்கைக்கு செவிசாய்த்த கடந்த அரசு, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக சர்வதேச நியமங்களின் அடிப்படையில் சர்வதேச பயங்கரவாதச் செயற்பாடுகள் இலங்கையை ஒரு தளமாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவரப்போவதாக கடந்த காலங்களில் தெரிவித்திருந்தது.

இந்த வகையில் கடந்த 1979 ஆம் ஆண்டு முதல் கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களாகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் (Prevention of Terrorism Act – PTA) பதிலாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை (Counter Terrorism Act – CTA) அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருந்தது.

இந்தப் புதிய சட்டமாகிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதையடுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவதாக ஐ.நா மனித உரிமைப் பேரவையில் கடந்த அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்தப் புதிய சட்டத்திற்கான வரைவு கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்டிருந்த போது, அது இரகசியமாகக் கசிந்து ஊடகங்களில் பகிரங்கமாகியிருந்தது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சில மோசமான அம்சங்கள் இந்தப் புதிய சட்டத்தில் வேறு வடிவங்களில் புகுத்தப்பட்டிருந்ததும், அவைகள் முன்னைய சட்டச் சரத்துக்களிலும் பார்க்க மோசமானவை என்பதும் வெளிச்சத்திற்கு வந்திருந்தது. இதனையடுத்து, அந்த வரைவு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு வருட காலத்தின் பின்னர் ஏப்ரல் மாத இறுதிப்பகுதியில் கடந்த கால அமைச்சரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. ஆயினும் புதிய வரைவும் கூட பயங்கரவாதத் தடைச்சட்டத்திலும் பார்க்க மோசமான விளைவுகளை ஏற்படுத்தத்தக்க அம்சங்களைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

## பயங்கரவாதத் தடைச்சட்டம் (Prevention of Terrorism Act – PTA)

பயங்கரவாதத் தடைச்சட்டமானது மிகவும் பயங்கரமானதாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் அளவுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கிய இந்தச் சட்டத்தின் மூலம் வெறும் சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டனர். சாதாரண குற்றவியல் சட்டத்தைப் போலல்லாமல், இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விசாரணை என்ற போர்வையில் நீண்டகாலத்திற்குத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். விசாரணைகளின்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அளிக்கின்ற வாக்குமூலங்களையே அவர்களுக்கு எதிரான சாட்சியமாகப் பயன்படுத்தி வழக்கு விசாரணை நடத்துவதற்கும் இந்தச் சட்டம் வழி செய்திருந்தது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பலர் செய்யாத குற்றங்களுக்காகத் தண்டனை அனுபவித்திருக்கின்றனர். விசாரணைகளின்போது புலனாய்வாளர்களினால் கையாளப்படுகின்ற விசாரணை உத்திகளின் மூலம் அவர்கள் விரும்பியவாறு உண்மைக்குப் புறம்பான வாக்குமூலங்களைப் பெற்று அவற்றை ஒப்புதல் வாக்குமூல சாட்சியங்களாகப் பயன்படுத்தி வழக்குகள் நடத்தப்பட்டிருந்தன. இவ்வாறு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பலர் பல வருடங்களாக இன்னும் சிறைச்சாலைகளில் வாடுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எவரையும் மறித்து சோதனையிடவும், விசாரணை செய்யவும், சந்தேகம் ஏற்பட்டால், அவர்களைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த விசாரணைகளின்போது பிரயோகிக்கப்பட்ட சித்திரவதைச் செயற்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த விதமான நிவாரணமும் பெறக்கூடியதாக அந்தச் சட்டத்தில் அம்சங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்லாமல், சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்ற ஒருவர் விசாரணை என்ற போர்வையில் சட்டரீதியாக தடுத்து வைக்கப்பட்டதன் பின்னர், அவர் மீது வழக்கு தாக்கல் செய்வதற்குத் தேவையான சாட்சியங்கள் இல்லை என விடுதலை செய்யப்பட்டாலும்கூட, அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததன் மூலம் செய்யாத குற்றத்திற்காக அனுபவித்த தண்டனைக்கு எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படுவதில்லை. அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டதன் காரணமாக அவருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நீதி வழங்கப்படுவதுமில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பேச்சுரிமை, நடமாடும் உரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் போன்ற பல அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டிருந்தன. அதிகாரப் பலம் கொண்டவர்கள் இந்தச் சட்டத்தின் துணையோடு தமது அரசியல் எதிரிகளையும், சாதாரண எதிரிகளையும் பழிவாங்கிய சம்பவங்களும் தாராளமாக இடம்பெற்றிருந்தன.

தமிழ் ஊடகவியலாளர்கள் மட்டுமல்லாமல் சிங்கள, ஆங்கில மொழி ஊடகவியலாளர்களும் சமூக அந்தஸ்து மிக்க முக்கியஸ்தர்களும் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு உள்ளாவதற்கு இந்தச் சட்டம் கடந்த காலங்களில் பேருதவி புரிந்திருந்தது. ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு இந்தச் சட்டத்தின் கீழ் 6 மாதங்கள் எந்தவித குற்றச்சாட்டும் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர் அவர் இனங்களுக்கிடையில் வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் தனது எழுத்துக்களைப் பயன்படுத்தினார் என்றும், அதன் மூலம் கிடைத்த வருமானத்தை பயங்கரவாதச் செயற்பாட்டுக்கு நிதி உதவி செய்தார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். இதனையடுத்து கொழும்பு மேல் நீதி மன்றத்தினால் 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதி அவருக்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது. அவருக்கு அளிக்கப்பட்ட இந்தத் தண்டனை உலகளாவிய ரீதியில் பெரும் கண்டனங்களும் விமர்சனங்களும் எழுந்திருந்தன. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் இந்தத் தண்டனை குறித்து கண்டனம் வெளியிட்டிருந்தார். இதனையடுத்து, 2010 ஆம் ஆண்டு மே 3 ஆம் திகதி சர்வதேச ஊடக தினத்தன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவருக்கு பொது மன்னிப்பின் கீழ் விடுதலையளித்தார். விடுதலையாகிய திஸ்ஸநாயகம் நாட்டைவிட்டு வெளியேறினார்.

அதேபோன்று முன்னாள் கொழும்பு மாநகர சபையின் துணை மேயர் அசாத் சாலியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இவரைக் கைது செய்ததன் மூலம் அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தியிருந்தது என்பது நிரூபிக்கப்பட்டிருந்தது.

இதுபோன்ற பல சம்பவங்களின் பின்னணியிலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பல அம்சங்களை உள்ளடக்கியதாகவும், மிகவும் பரந்த அளவிலான கருத்துச் செறிவுமிக்க சொற்பிரயோகத்தின் மூலம் அந்தச் சட்டத்தையும் விட மோசமான விளைவுகளைக் கொண்டதாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாக பல அமைப்புக்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Counter Terrorism Act – CTA)

மனித உரிமைகள் மதிக்கப்படும், மனித உரிமை நிலைமைகள் மேம்படுத்தப்படும் என்று சர்வதேசத்திற்கு வழங்கியுள்ள உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கு விருப்பமில்லாத தன்மையை வெளிப்படுத்தும் வகையிலேயே அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாகப் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக் கொண்டு வருகின்றது என்று பலதரப்பட்ட மனித உரிமை அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் சுட்டிக்காட்டியிருந்தன. அரசுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களையும், அவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துக்களையும் முறியடித்து அவர்களைத் தண்டிப்பதற்காகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசு கொண்டு வருகின்றது என்று பல அமைப்புக்கள் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொள்கை ஆய்வு அடையாளம் மையம், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்டம், இலங்கை மக்களின் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான அமெரிக்காவைச் சேர்ந்த அமைப்பு, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த இலங்கைக்கான பிரசார அமைப்பு, வடகிழக்கைச் சேர்ந்த தமிழ் சிவில் அமைப்புக்களின் ஒன்றியம் போன்ற அமைப்புக்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையொன்றில் கடந்த காலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி அரச தரப்பினர் தமது அரசியல் எதிரிகளையும் அரச எதிர்ப்புக் கருத்துக்களையும் முறியடித்தார்கள் என்பதை நினைவு கூரப்பட்டுள்ளது.

எனவே, பயங்கரவாதம் நாட்டில் இருந்து ஒழிக்கப்பட்டு, பயங்கரவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்ததாகக் கூறப்படுகின்ற விடுதலைப்புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டதன் பின்னர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அம்சங்களை மறைவாக உள்ளடக்கிய வகையில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை அரசாங்கம் உள்நோக்கத்துடனேயே கொண்டு வருகின்றது என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது. இந்தச்சட்டத்தின் அம்சங்கள் பல சாதாரண பொது மக்களின் பேச்சுரிமை, தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமை, தகவல்களை சுதந்திரமாகப் பரிமாறிக்கொள்வதற்கான கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பவற்றை, தேசிய பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு என்ற அம்சங்களுக்குள்ளே மறைவான முறையில் பறிக்கும் வகையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

தொடரும்...

**நெற்றிப்பொறியன்**

# 'கொரோனாவும், போராடும் அரசும்'

## மக்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும்



இன்று கொரோனா அச்சத்தின் காரணமாக உலகமே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. உலகளவில் ஒரு மில்லியனைக் கடந்துள்ளது மரணங்களின் எண்ணிக்கை. இலங்கையைப் பொறுத்தவரை கொரோனா வைரஸ் என்பது ஆரம்பத்தில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்த வெளிநாட்டவர் மற்றும் வெளி நாடுகளில் தங்கியிருந்து வேலை செய்யும் இலங்கையைச் சேர்ந்த நபர்களின் வருகையால் இலங்கைக்கு பரப்பப்பட்டது. அவர்களால் மாத்திரம் தான் தொற்று எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்தது.

ஆனால் தற்போது இலங்கையில் உள்ளவர்களுக்கு கொரோனோ தொற்று பரவ ஆரம்பித்திருக்கிறது. இரண்டு கொத்தனிகள் கூட அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இது சமூகப் பரவல் இல்லை என்கிறது சுகாதார அமைச்சு. பன்னிரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் இவ் வைரசினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதுவரை இலங்கையில் மரணங்களின் எண்ணிக்கை 30 ஆக பதிவாகியுள்ளது. பலர் மனதளவிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அச்சத்தின் மத்தியில்மக்கள் இன்றுவாழவேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

இதைவிட அடையாளங் காணப்பட்ட கொத்தனிகளுடன் தொடர்பு பட்டவர்களுடனான வைரஸ் பரவலின் மூலமாக மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்துள்ளனர். வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் இவ் வைரஸ் தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்படுகின்றார்கள்.

அதாவது அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவ்விடயத்தில் அரசின் கவனம் மிகக்குறைவாகவே இருக்கிறது. அவர்கள் வெளியிலும் நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதனால் தமது தொழிலுக்கும் செல்லமுடியாத இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப் பட்டுள்ளனர். அச்சம் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் வீடுகளுக்குச் செல்வதற்கு சுகாதாரத் துறையினரே அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்தந்த மாவட்டங்களின் சுகாதாரப் பிரிவினர் இவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

நாட்டில் இன்று சமூகத் தொற்று தான் ஏற்பட்டுள்ளதாக ஒரு சிலரால் கூறப்படுகின்றது. இன்று ஆலய வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளது. மக்கள் பொது இடங்களில் ஒன்றுகூடுவது முற்றாகத் தடையும் செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரசின் தாக்கம் இலங்கையில் அதிகரித்துவரும் நிலையில் மக்கள் அனைவரும் அச்சத்திலிருக்க, நாட்டினுடைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் சீனாவுடன் கைகோர்த்து உறவுகளை வளர்த்துக்கொண்டுள்ளார். அரசின் பொறுப்பற்ற விதத்திலான செயற்பாடுகளையும் காணக்கூடிய தாகவிருக்கிறது.

சுகாதாரத் துறையினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் கூறுகின்ற விடயங்களை செவிமடுத்துத் தான் நாட்டின் ஜனாதிபதி இன்று செயற்படவேண்டியதொரு நிலை இருக்கிறது. மருத்துவர்களின் ஆலோசனைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் இந்நாட்டு மக்களை ஆபத்திலிருந்து பாதுகாக்கலாம். அத்துடன் நாட்டில் தற்போது பொதுப் போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது. மாவட்டங் களுக்கிடையிலான போக்கு வரத்துக்கள் தடைசெய்யப் பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குகளும், ஊரடங்குச் சட்டமும் தெற்கில் அதிக தொற்றுக்கள் பரவும் என அடையாளம் காணப்பட்ட அல்லது பரவியிருக்கக்கூடிய பிரதேசங்களில் பரவலைத் தடுக்கவேண்டும், சமூகத் தொற்றாக மாறிவிடாமல் கட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்கிற நோக்குடன் அமுல் படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டிலும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்படுகின்றனர்.


முதலாவது அலை என்று கூறப்பட்ட காலங்களில் நாடு முழுமையாக முடக்கப்பட்டிருந்தது. போக்குவரத்துக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டிருந்தது. இதன்போது வைரஸ் பரவல் என்பது ஏற்படவில்லை. ஆனால் இப்பொழுது நாட்டை முழுமையாக முடக்கமுடியாத நிலையில் அரசு உள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாக மாறும் என்பது உண்மை தான். எனினும் எதிர்வரும் காலங்களில் நாட்டை முடக்காது விட்டால் இத்தொற்றினால் நாடு முழுவதுமுள்ள மக்கள் பாதிப்படையக்கூடும் என்பது உண்மை. அதேவேளை மருத்துவத் தரப்பினர் இவ் வைரஸ் தொற்று இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்பும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதற்கான வாய்ப்பும் இருப்பதாக கடுமையாக எச்சரிக்கையும் செய்திருக்கின்றனர்.

மக்களின்நடமாட்டத்தைக்கட்டுப்படுத்துகின்றபோதுதான் இத்தொற்றுஇன்னும் தீவிரமாவதைத்தடுக்கமுடியும். அத்தியாவசியப்பொருட்களுக்காகவீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் வெளியில் செல்ல அனுமதிக்கவேண்டும். கிராமங்களினூடாக இதற்கான வேலைத்திட்டங்கள் தீவிர மாக்கப்படவேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழக்கூடிய மக்களுக்குத் தேவையான சுகாதாரமற்றும்உணவுவசதிகளை அரசுவழங்கவேண்டும். அல்லாவிடின் மக்கள் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இராணுவ - பொலிசார் அதிகளவில் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இவர்களும் இன்று சமூக ரீதியாக வேலைசெய்கின்றபோது இத்தொற்று இன்னும் அதிகரிக்க வாய்ப்பும் இருக்கிறது என்பதால் இவர்கள் மீதும் அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும். முப்படைகள் இவ் வேலைத்திட்டத்தில் களமிறக்கப்பட்டுள்ளதால் அவர்களை மிக அவதானமாக கையாளவேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை இவ்வைரசைக் கட்டுப்படுத்த இன்னும் காலங்கள் தேவைப்படும்.

வெளிநாட்டு நபர்களின் மூலமான பரவலைக் கட்டுப்படுத்தியிருக்கின்ற அரசு உள்ளூர் ரீதியான பரவலைக் கட்டுப்படுத்துவதில் தவறிழைத்திருப்பது தெரிகிறது. அதிகாரங்களை நாட்டிலுள்ள மருத்துவத்துறை மற்றும் இராணுவத் தரப்பிற்கு வழங்கவேண்டும். ஜனாதிபதி மாத்திரம் அனைத்து அதிகாரங்களையும் கைகளில் வைத்துக்கொண்டு எதனையும் சாதிக்க முடியாது. மாடமாளிகையில் இருந்துகொண்டு அறிக்கைகளை வெளியிடுவதும் கூட்டங்களை நடாத்துவதால் மாத்திரம் இவ் வைரசினைக் கட்டுப்படுத்த முடியாது. கிராம மற்றும் நகர்ப் புறங்களில் இதற்கென செயலணிகள் உருவாக்கப்படவேண்டும். மக்கள் மத்தியிலான விழிப்புணர்வுகள் இன்னுமின்னும் அதிகரிக்கப்படவேண்டும். அப்போதுதான் இவ் நாட்டை வெகுவிரைவில் கொரோனா கிருமியிடமிருந்து மீட்டெடுக்க முடியும்.

**இரணியன்**



02ஆம் பக்கத் தொடர்ச்சி...

கொஞ்சம் பிரத்தி யேகமான தமது அபிவிருத்திக்குரிய அரசியல் உரிமைகள் சிலவற்றையே கோர முடியும். போட்டி தன்மை உள்ள பிரதேசவாதம் சமஷ்டியின் உறுதியற்ற தன்மையை அதிகரிக்க செய்யும். சமஷ்டி பிரிந்து போதலை ஊக்குவிக்கிறதா? என்ற கேள்வியை தொடுக்கும் போது இருவிதமான பதில்களை பெறமுடியும். ஆனால் சமஷ்டி பிரிந்து போதலையே அதிகமாக ஊக்குவிக்கின்றது என்பதே பெரும்பான்மை சமுக விஞ்ஞானத்தின் முடிவாகும்.

எனவே நீண்டகால இனமுறுகளால் பாதிக்கப்பட்ட சமுகத்துக்கு சமஷ்டி முறையிலான தீர்வை வழங்க ஒடுக்குமுறையாளர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். அது மீண்டும் ஒரு தனி நாட்டுக் கோரிக்கைகளை வலுப்பெற செய்யும் என்பதே ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பாகும். சமஷ்டி ஆட்சி நீடித்து நிலைபெறும் என சொல்ல முடியாது. இன குழுமங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் நாட்டில் பேராபத்தை கொண்டு வந்துவிடும் என்பது ஆட்சியாளர்களின் எச்சரிக்கையாகும்.

இலங்கை அரசு தமிழருக்கு என்று சில விசேட அதிகாரங்களை பகிர்வதோடு தனது புதிய அரசியல் யாப்பை நிறுத்திக்கொள்ளும். குறிப்பாக இன்றைய 13ம் திருத்தம் போல இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். இதனை விடுத்து சமஷ்டியை பெற்று விடலாம் என தமிழ் தேசிய கூட்டமைப்போ அல்லது தமிழ் மக்களோ நினைத்தால் அது எதிர்காலத்தில் ஏமாற்றமாகவே இருக்கும். இன்று தமிழர்கள் அனைத்தையும் இழந்துவிட்டனர். பேரம் பேசும் வாய்ப்புகள் எவையும் இல்லை. அந்த எதிர்கால ஏமாற்றங்களை இன்று தவிர்க்க பழகிக்கொண்டால் எதிர்கால வாழ்வு இலங்கையில் உள்ள இனங்களை ஐக்கியப்படுத்தும். தமிழீழமும் சமஷ்டியும் ஆட்சியாளர்களை பொறுத்தவரை ஒன்றுதான் என்பதே அவர்களின் நிலைப்பாடு. மாறாக தமிழர்களுக்கு தீர்வு சமஷ்டி தான் எனும் மாயையை தமிழ் தலைமைகள் தோற்றுவித்தால் ஏனைய சமூகங்களும் தமிழர்களை ஒதுக்கவேண்டிய நிலையே ஏற்படும். அது மீண்டும் இலங்கையில் பல்லின சமூகங்களுக்கு இடையே அச்சத்தையும் எதிர்கால இருப்பையும் கேள்விக்குறியாக்கிவிடும் என்பதே உண்மை. இலங்கையில் சமஷ்டி இல்லையேல் தமிழ் இனம் ஆயுதம் ஏந்திப்போராடுவதை விட வேறு வழியில்லை.

# வன்னி யுத்தத்தில் இரசாயன ஆயுதம்

**25.10.2020 அன்று வெளியாகிய கட்டுரையின் தொடர்ச்சி...**

அதுவும் அந்த நேரத்திலேயே 1000 இற்கும் அதிகமான இரசாயன ஆயுதங்கள் சிறிலங்காப் படைகள் வசம் இருந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**வன்னி யுத்தத்தில் இரசாயன ஆயுதம்**

இது இவ்வாறு இருக்க, வன்னி யுத்தத்தின் போது இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கும் நோக்கம் சிறிலங்கா இராணுவத்தினருக்கு இருந்திருக்கின்றது என்கின்ற உண்மையும், ஒரு சந்தர்ப்பத்தில் வெளிப்பட்டு நின்றது.

2008ம் வருடம் செப்டெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இரசாயன ஆயுதம் பற்றி, புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்துசென்ற புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி கருணா பிரஸ்தாபித்திருந்தார். 'வன்னியில் பின்னடைவைச் சந்தித்துவரும் விடுதலைப் புலிகள் அமைப்பு அங்கு இரசாயன ஆயுதங்களைப் பாவித்துத் தாக்குதல் நடாத்தத் தயாராகி வருவதாக' கருணா ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். கருணாவின் இந்தக் கூற்று சர்வதேச ஊடகங்களில் எல்லாம் வெளியாகி அதிக பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கருணாவின் அன்றைய நிலையைப் பொறுத்தவரையில் அவர் முழுக்க முழுக்க சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருந்து வந்தார். அவருக்குப் பொறுப்பாக இருக்கும் சிறிலங்காப் படைத்துறை அதிகாரியின் அனுமதியின்றி அவரால் மட்டக்களப்பில் உள்ள அவரது குழு உறுப்பினரைக்கூடத் தொடர்புகொள்ள முடியாது. அந்த நேரத்தில் கருணாவின் அனைத்து மெய்பாதுகாவலர்கள் கூட, முழுக்க முழுக்க சிங்கள படைவீரர்களே. அப்படி இருக்க, விடுதலைப் புலிகளின் தலைமை இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கத் தீர்மானித்த விடயம் கருணாவிற்கு தெரியவர அந்த நேரத்தில் சந்தர்ப்பம் இல்லவே இல்லை. அப்படி இருக்க, இந்த இரசாயன ஆயுத விவகாரத்தை கருணா எதற்காக சர்வதேச ஊடகங்களுக்கு வெளியிட்டிருந்தார்? இங்கு தான் முக்கிய சந்தேகம் உதயமாகின்றது.

உண்மையில் கருணா மூலம் இந்த இரசாயன ஆயுத விவகாரம் வெளியே வரவேண்டும் என்ற சிறிலங்காப் படையினரின் விருப்பத்தையே, அந்த நேரத்தில் கருணா நிறைவேற்றி வைத்திருந்தார். அன்றைய நிலையில், கருணா என்ன செய்யவேண்டும், எங்கு போகவேண்டும், என்ன பேசவேண்டும் என்றெல்லாம் தீர்மானிக்கும் தரப்பாக, சிறிலங்காப் புலனாய்வுப்பிரிவே இருந்து வந்திருக்கின்றது. அந்தப் பிரிவினரின் உத்தரவின் பெயரிலேயே, புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்க இருக்கின்றார்கள் என்ற தகவலை கருணா வெளியிட்டிருக்கின்றார் என்பதில் சந்தேகம் இல்லை. கருணா என்கின்ற நபர், வன்னியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஜெயசிக்குறு படைநடவடிக்கைக்கு எதிரான விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கியவர். அந்த நடவடிக்கைகளை ஒருகிணைத்தவர். எனவே அவரது வாயில் இருந்து, புலிகள் தொடர்பான, அதிலும் குறிப்பாக வன்னியில் புலிகள் மேற்கொள்ளக் கூடியதான நடவடிக்கை குறித்ததான செய்திகள் வெளிவந்தால் அவற்றிற்கு ஒரு பெறுமதி நிச்சயம் இருக்கும். இது சிறிலங்காப் புலனாய்வுத்துறைக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான், இந்த இரசாயன ஆயுதம் பற்றியதான தகவலை கருணாவின் வாயில் இருந்து வெளியே கசியவிட்டிருந்தார்கள்.



இதேபோன்று, 17.09.2008 அன்று அக்கராயனில் விடுதலைப் புலிகள் வாயுத் தாக்குதலை மேற்கொண்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இதனால் பல சிறிலங்காப் படையினர் பாதிக்கப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியாகி இருந்த இந்தச் செய்தியும், சர்வதேச ஊடகங்களைக் குறிவைத்தே வெளியிடப்பட்டிருந்தது நோக்கத்தக்கது. சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்காரவும் இதனை ஊடகவியலாளர்களுக்கு பின்னர் உறுதிப்படுத்தியிருந்தார்.

சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினரால் நடாத்தப்பட்டுவருவதாக தமிழர் தரப்பினரால் குற்றம் சாட்டப்படுகின்ற ஆங்கில இணையத்தளம், புலிகள் இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதாகவும், அவற்றை பாவிக்கத் தயாராகிக் கொண்டிருப்பதாகவும் பல்வேறு தலைப்புக்களில் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தது. தொடர்ச்சியாக சிறிலங்காப் படையினரால் அந்த நேரத்தில் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த இரசாயன ஆயுதம் பற்றிய செய்திகள்தான், உண்மையிலேயே சிறிலங்காப் படையினர் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கத் தயாராகின்றார்களா என்கின்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் படியாக இருந்தது. அந்தக் காலம் முதல் சிறிலங்கா அரசாங்கமும், அதன் படைத்துறையும் மேற்கொண்டு வந்த நகர்வுகளைப் பார்க்கும் பொழுது, வன்னியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அவர்கள் இரசாயன ஆயுதங்களை பாவிக்கத் தயாராகி வந்தார்கள் என்கின்றதான சந்தேகம் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் இருந்தது.

**தொண்டர் அமைப்புக்களின் வெளியேற்றம்**

அதிலும் குறிப்பாக, வன்னியில் தங்கியிருந்து பணியாற்றிக் கொண்டிருந்த சர்வதேச தொண்டர் அமைப்பு பணியாளர்களை சிறிலங்கா அரசு அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றியதைத் தொடர்ந்து, இந்தச் சந்தேகம் மேலும் அதிகரித்திருந்தது. யுத்தம் நடைபெறும் ஒரு இடத்தில் சர்வதேச நியதிகளின் ஒரு அடையாளமாக, சர்வதேச தொண்டர் அமைப்புப் பணியார்களே இருந்து வருவார்கள். சண்டையிடும் இரண்டு தரப்புக்களும் சர்வதேச நியதிகளைக் கடைப்பிடிக்கின்றார்களா என்பதை நேரடியாகவும் மறைமுகமாகவும் கண்காணிக்கும் பொறுப்பை பெரும்பாலும் இந்த தொண்டர் அமைப்பு பணியாளர்களே மேற்கொண்டு வருவார்கள். 'சண்டையிடும் தரப்பினர் சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துகின்றார்களா?' என்பது முதல், 'பொது மக்களைக் குறிவைத்து வேண்டுமென்றே தாக்குகின்றார்களா?', 'சர்வதேச நியதிகளை மீறி நடந்து கொள்கின்றார்களா?' என்றெல்லாம்கண்காணித்துசர்வதேச நாடுகளுக்கும், ஐ.நாவுக்கும் தகவல் வழங்கும் தரப்பாகச் செயற்படுபவர்கள்இந்ததொண்டர் அமைப்புப் பணியாளர்கள்தாம்.

அதிலும் குறிப்பாக, யுத்தத்தில் ஈடுபட்டுவரும் ஏதாவது ஒரு தரப்பு, உலகில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை அல்லது கிளஸ்டர் குண்டுகளைப் பாவித்தால், அதனை உலகின் கண்களுக்குக் கொண்டு செல்லும் பணியையும் கூட, இந்த தொண்டர் அமைப்பினரே மேற்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தொண்டர் அமைப்புப் பணியாளர்களை முழுவதுமாகவேவன்னியில்இருந்துசிறிலங்கா அரசு வெளியேற்றியிருந்ததானது, வன்னியில் சிறிலங்காப் படைகள் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கப் போகின்றார்களா என்கின்றதான சந்தேகத்தை மேலும் அதிகரிப்பதாகவே அந்த நேரத்தில் இருந்தது.

இரசாயன ஆயுதங்கள் மற்றும் கிளஸ்டர் குண்டுகள் என்பது பாரிய அழிவினை எதிரிக்கு ஏற்படுத்தக் கூடியது. கொடூரமான மரணத்தை எதிரிக்கு ஏற்படுத்தக் கூடியது. உலகில் இப்படியான ஆயுதங்களின் பாவனைக்கு எதிராகக் கடுமையான தடை இருக்கின்றது. இப்படிப்பட்ட ஆயுதங்களைப் புலிகள் பாவிக்கப் போகின்றார்கள் என்கின்ற சிறிலங்காவின் கூற்று உண்மையாக இருந்தால், அல்லது இதனை சிறிலங்காப் படையினர் உண்மையாகவே நம்பியிருந்தால், நிச்சயமாக இந்த விடயத்தை சர்வதேசத்திற்கு நிரூபித்து, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புலிகள் சுயநிர்ணயக் கோரிக்கையை முன்வைக்க முடியாத அளவிற்கு புலிகளை நிரந்தரப் பயங்கரவாதிகள ஆக்கிவிடவே முயன்றிருப்பார்கள். புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதனை அம்பலப்படுத்தி, அதனை நிரூபிக்க சிறிலங்காத் தரப்பிற்கு இருந்த ஒரு நல்ல சந்தர்ப்பம்தான், வன்னியில் இருந்த சர்வதேச தொண்டர் அமைப்புப் பணியாளர்கள்.

யுத்தமுனைகளில் சர்வதேச நியதிகள் கடைப்பிடிக்கப் படுகின்றதா என்று கண்காணித்துக் கொண்டிருக்கும் ஐ.நா. தொண்டர் அமைப்பு பணியாளர்கள் வன்னியில் பிரசன்னமாகி உள்ள நிலையில் புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தால், அது விடுதலைப் புலிகளின் போராட்டத்தை சர்வதேச சமூகம் முற்றாகவே தடைசெய்வதற்கு ஏதுவானதாக அடைந்துவிடும். இது சிறிலங்காவிற்கு நன்றாகவே தெரியும். அப்படி இருந்த நிலையிலும், வன்னியில் இருந்து சர்வதேச தொண்டர் அமைப்புப் பணியாளர்களை பலவந்தமாக வன்னியில் இருந்து சிறிலங்கா அரசு வெளியேற்றியதானது, சிறிலங்கா அரசு தொடர்பான பலமானதொரு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே இருந்தது.

சிறிலங்கா கூறுவது போன்று வன்னியில்இரசாயன ஆயுதத்தைப் பாவிக்கப் போவது புலிகள் அல்ல என்றும், சிறிலங்காப் படைகளே அங்கு இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கப் போகின்றார்களோ என்கின்றதாக சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அது இருந்தது. இந்தப் பின்னணியில்தான், வன்னியின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்சிறிலங்காப்படைகள் இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததான செய்தி 2009ம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியாகியிருந்தது.

**தொடரும்...**

**சுழியோடி**




## பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய அனுபவம் குறித்து நடிகை சமந்தா



நாகார்ஜீனாவுக்கு பதில் தெலுங்கு பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய அனுபவம் குறித்து நடிகை சமந்தா தெரிவித்துள்ளார்.

தெலுங்கு பிக்பாஸ் நிகழ்ச்சியை நாகார்ஜீனா தொகுத்து வழங்குகிறார். சில தினங்களுக்கு முன்பு சினிமா படப்பிடிப்பு இருந்ததால் அவரால் பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியவில்லை. எனவே அவருக்கு பதிலாக நடிகை சமந்தா தொகுத்து வழங்கினார். இந்த அனுபவம் பற்றி அவர் கூறும்போது, "இதற்கு முன்பு பிக்பாஸ் நிகழ்ச்சியை நான் பார்த்தது இல்லை என்பதால் அங்கு என்ன நடக்கிறது என்றே தெரியாது. சினிமாவில் நடித்ததோடு சரி, தெலுங்கும் சரளமாக பேச வராது. அங்குள்ள போட்டியாளர்களை எப்படி கையாள்வது என்றெல்லாம் பயமாக இருந்தது. ஆனால் நாகார்ஜீனா உன்னால் முடியும் போ என்று தைரியம் சொல்லி அனுப்பி வைத்தார்.

அங்கு எனது மைத்துனர் அகில் வந்திருப்பதை பார்த்ததும் சகஜமானேன். நிகழ்ச்சியை உற்சாகமாக தொகுத்து வழங்கினேன். நிகழ்ச்சி முடிந்தபிறகு பலரும் என்னை பாராட்டினர். இப்போது என்னாலும் பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க முடியும் என்ற நம்பிக்கை வந்துள்ளது" என்றார்.

## மணப்பெண் ஆடையில் நடிகை மடோனா செபஸ்டியன்!

மலையாளத்தில் வெளியான பிரேமம் என்ற திரைப் படத்தின் மூலம் பிரபலமானவர் மடோனா செபஸ்டியன். இவர் தமிழில் காதலும் கடந்து போகும், கவண், பா.பாண்டி, ஜீங்கா உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

மேலும் எஸ்ஆர் பிரபாகரன் இயக்கிவரும் கொம்பு வச்ச சிங்கம்டா படத்தில் சசிகுமாருக்கு ஜோடியாக அவர் நடித்து வருகிறார். இத் திரைப்படத்தின் படப்பிடிப்பானது சமீபத்தில் நிறைவடைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மடோனா செபஸ்டியன் அண்மையில் மணப்பெண் ஆடையில் போட்டோ ஷுட் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதைப்பார்த்த ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்து திருமணத்திற்கு தயாராகி விட்டீர்களா என சமூக வலைத்தளங்களில் கேள்வி எழுப்பி வருகின்றனர்.





## பிக்பாஸ் வீட்டுக்குச் செல்லும் மேலும் ஒரு பிரபலம்!

நடிகர் கமல் ஹாசன் தொகுத்து வழங்கும் பிக்பொஸ் நிகழ்ச்சியானது கடந்த ஒரு மாதமாக விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இந் நிகழ்ச்சியில் ரேகா, வேல்முருகன் ஆகிய இரு போட்டியாளர்கள் இதுவரை வெளியேறிய நிலையில் அர்ச்சனா மற்றும் சுசித்ரா ஆகிய இரண்டு போட்டியாளர்கள் வைல்ட்கார்ட் எண்ட்ரியாக உள்ளே வந்துள்ளனர்.

இந் நிலையில் தற்போது வெளியான தகவலின்படி அட்லி இயக்கத்தில் விஜய் நடித்து வெளியான பிகில் திரைப்படத்தில் பாண்டியம்மாள் என்ற கதாபாதிரத்தில் நடித்த இந்திரஜா மூன்றாவது வைல்கார்ட் போட்டியாளராக பிக்பொஸ் வீட்டிற்குள் வரவுள்ளதாக கூறப்படுகின்றது.

இவர் பிரபல நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது



## பிரபல கட்சியில் இணையும் நடிகர் விஷால்!



தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான நடிகர் விஷால் 2004 ஆம் ஆண்டு வெளியான 'செல்லமே' என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார்.

இதுவரை 40 திரைப்படங்களில் நடித்துள்ள இவர் பிரபல கட்சியொன்றில் இணையவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நடிகைகளான குஷ்பு, காயத்ரி ரகுராம், உள்ளிட்டோர் பிஜேபியில் இணைந்து வரும் நிலையில் விஷாலும் குறித்த கட்சியில் இணையவுள்ளதாக கூறப்பட்டன. எனினும் விஷால் திமுகவில் இணையவுள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் உதயநிதி ஸ்டாலின், விஷாலை அணுகி திமுகவில் இணைய வேண்டும் என்று கூறியதாகவும் அதற்கு விஷால் சம்மதம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. விஷால் திமுகவில் இணைந்தால் முக்கிய பொறுப்பு கொடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.




## முக அழகிற்கு இந்தவொரு பொருள் மட்டுமே போதும்!

பொதுவாக பழங்காலத்தில் இருந்தே பெண்கள் முக அழகை பேணி காப்பதற்கு கடலை மாவை பயன்படுத்தி வந்துள்ளனர். பொலிவிழந்த சருமத்தை இளமையூட்டும் தன்மை கடலை மாவிற்கு உண்டு. இதனை தினமும் முக அழகிற்கு, பயன்படுத்தி வந்தால் நல்ல மாற்றத்தை உணரலாம். அந்தவகையில் தற்போது கடலை மாவை எந்தவித சருமத்திற்கு எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என பார்ப்போம்.

**சென்சிடிவ் சருமத்திற்கு**

சருமம் அழகு பெற கடலை மாவு ∴பேஸ் பேக்:- ஒரு பௌலில் கடலை மாவு மற்றும் ரோஸ் வாட்டர் சேர்த்து நன்கு கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின் வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இந்த செய்முறையினை வாரத்திற்கு 2-3 முறை செய்து வர சருமம் என்றும் பொலிவுடன் காணப்படும்.

**எண்ணெய் பசை சருமத்திற்கு**

கடலை மாவு ∴பேஸ் பேக்:- கடலை மாவை *சீமைச்சாமந்தி டீ* சேர்த்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் தடவி சில நிமிடங்கள் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும். இந்த முறையினை வாரம் ஒருமுறை பயன்படுத்தினால், சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, சருமம் பொலிவோடு இருக்கும்.

**சாதாரண சருமத்திற்கு**

ஒரு பௌலில் கடலை மாவு 1/2 டீஸ்பூன், முல்தானி மெட்டி 1 டீஸ்பூன், பாதாம் எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன்,ஆகியவற்றை சேர்த்து பேஸ்ட் போல் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும்.

**கருமையான சருமத்திற்கு**

ஒரு சிறிய கிண்ணத்தில் கடலை மாவு 1 டீஸ்பூன், பப்பாளி கூழ் 1 டேபிள் ஸ்பூன், எலுமிச்சை சாறு 1/2 டீஸ்பூன் ஆகியவற்றை சேர்த்து பேஸ்ட் போல் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவுங்கள். இந்த முறையினை வாரத்திற்கு 2 முறை பயன்படுத்தினால், சரும கருமை நீங்கி, சருமம் பொலிவோடு காணப்படும்.

**பொலிவிழந்த சருமத்திற்கு**

ஒரு பௌலில் கடலை மாவு 1 டீஸ்பூன், தேன்1 டேபிள் ஸ்பூன் ஆகியவற்றை சேர்த்து கலந்து, சருமத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவுங்கள். இந்த முறையினை வாரத்திற்கு ஒரு முறை செய்து வந்தால், சரும பொலிவு மேம்பட்டு, சருமம் புத்துணர்ச்சியுடனும், பிரகாசமாகவும் காணப்படும்.

இமைக்கின்ற
கண்கள் பார்ப்பது
பலரை என்றாலும்
பார்க்க நினைப்பது
உன்னை மட்டும்தான்
துடிக்கிற இதயம்
எனக்குள்
இருந்தாலும்
அது உனக்காக
மட்டும் தான்
துடிக்கிறது






## ப்ளாஸ்டிக் போத்தலில் தண்ணீர் குடிப்பவரா நீங்கள்?

ப்ளாஸ்டிக் போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரை தான் பலரும் இப்போதெல்லாம் குடிக்கிறார்கள்.



உலகம் முழுவதும் இதே நிலை உருவாகி விட்டது என கூறினால் அது மிகையாகாது.

ஆனால், பிளாஸ்டிக் போத்தல் தண்ணீர் உடல் நலத்திற்கு நல்லதல்ல என்று ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள 11 முன்னணி நிறுவனங்களின் 250 குடிநீர் போத்தல்களை ஆய்வுக்கு எடுத்து அவற்றை பரிசோதித்துள்ளனர்.

இந்த போத்தலில் உள்ள தண்ணீரை 1.5 மைக்ரான் அதாவது 0.0015 மில்லி மீட்டர் அளவு துவாரம் கொண்ட வடிகட்டி மூலம் வடித்தெடுத்து பின்னர் அந்த வடிகட்டியில் தேங்கியுள்ள பொருட்களை ஆய்வு செய்தார்கள். மைக்ராஸ்கோப் மற்றும் இன்ப்ரா ரெட் பரிசோதனை மூலம் இந்த ஆய்வு செய்யப்பட்டது. அப்போது அதில் ஏராளமான பிளாஸ்டிக் மற்றும் ரசாயன துகள்கள் இருந்து தெரியவந்தது.

அதாவது பாலிபுரோப்லின், நைலான், பாலித்தீன், டெரபதலேட் (பெட்) துகள்கள் அந்த வடிகட்டியில் தேங்கி இருந்தன. அதாவது தண்ணீருக்குள் இந்த துகள்கள் கலந்து இருந்தன.

சராசரியாக ஒரு லிட்டர் தண்ணீரில் 0.1 மில்லி மீட்டர் அளவு கொண்ட 10.4 பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருந்தன. சில போத்தல்களில் ஒரு லிட்டர் நீரில் 10 ஆயிரம் துகள்கள் கூட கலந்திருப்பது தெரியவந்தது. ஒருசில போத்தல்களில் மட்டுமே இந்த துகள்கள் இல்லாமல் இருந்தது.

இந்த துகள்களை செரிமானம் செய்யும் சக்தி நமது உடலுக்கு கிடையாது. குடலுக்குள் செல்லும் இந்த துகள்கள் மிக சிறியதாக இருக்கும்.

அந்த பிளாஸ்டிக் துகள்கள் குடல்வழியாக ரத்த குழாய்க்குள் சென்று ஒவ்வொரு உறுப்புகளிலும் தேங்குகிறது. இதன் காரணமாக ஈரல், சிறுநீரகம் போன்றவை பாதிக்கப்படும். மேலும் பல்வேறு பாதிப்புகளையும் உடலில் அவை ஏற்படுத்தும் என தெரியவந்துள்ளது.

தொகுப்பு :- சப்தஹி

# உளச் சமூகத் தலையீட்டின் முதலுதவி

**25.10.2020 அன்று வெளியாகிய கட்டுரையின் தொடர்ச்சி...**

முகாமையாளர் – நீங்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு செல்லுங்கள்... உங்கள் அணிக்கு செய்யவேண்டியவைகள் தெரியும் தானே... அலுவலக வேலைகளை நாம் பார்க்கின்றோம்.... நீங்கள் அவருடன் உங்கள் நேரத்தை செலவழியுங்கள்... உங்களுடன் நாம் எப்போதும் உள்ளோம்... (உரையாடல் தொடர்ந்து நிறைவாகியது)

மேரி – நன்றி, சேர்...

முகாமையாளர் – நன்றி மேரி என்னுடன் பகிர்ந்து கொண்டமைக்கு...

இந்தச் சூழ்நிலையில், ஒருவர் தன் தாயின் உடல் நலன் குறித்து உதவியற்றுச் சோகமாக உள்ளார், என்பதை பார்த்தல் ஊடாக உணர்ந்த அவருடைய முகாமையாளர் தன் சக பணியாளருக்கு உளநல முதலுதவி வழங்கினார். ரகசியம் பாதுகாப்பதை உறுதிப்படுத்தினார். அவர் புரிந்து கொள்பவராக இருந்தார், மேலும் மேரி கூறுவ தைக் குறுக்கிடாமல் உன்னிப்பாகக் கேட்டார், அவரது உணர்வுகளை வெளிப்படுத்த உதவினார். அவர் மேரிக்கு எளிதாக்கவும் தனது தாயுடன் நேரம் செலவழிக்கவும் உதவியதுடன் கூட இருப்பது போன்ற உணர்வை வழங்கினார்.

**உளநல முதலுதவியாளர் என்ன செய்யக்கூடாது?**

உளவியல் முதலுதவி அளிக்கிறோம் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லக்கூடாது என்ற கற்பிதம் தவறானது. நம்மைப்பற்றிய தவறான தகவலை அளிக்கக்கூடாது. பிரச்சினைகளைநாமாகக்கேட்கக் கூடாது. பிரச்சினைகளை இவரிடம் சொல்லலாமா வேண்டாமா என்று அவர்கள் முடிவுசெய்யும் சுதந்திரத்தை அளிக்க வேண்டும். அவர்கள் கூறுவதை வைத்து எடுகோள் தீர்மானத்தையும் எடுப்பதை தவிர்க்க வேண்டும். என்னால் உங்களுக்காக என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற ரீதியில் தவறான நம்பிக்கையை விதைக்கக்கூடாது. அவர்கள் உணர்வுகளுடன் உங்கள் உணர்வுபூர்வ இணைப்புக்கூடாது. பொருத்தமற்ற வார்த்தைகளை அறவே பயன்படுத்தக்கூடாது. அவர்கள் செல்லும்போது பொருத்தமற்று குறுக்கு விசாரணை செய்யக்கூடாது. வறுமையில் இருக்கிறாய், சோகமாய்ப் பார்க்கிறாய், கஷ்டப்படுகிறாய் என்று எந்த முத்திரையும் குத்தக்கூடாது. ஒருவர் நம்மிடம் மனம்விட்டுப் பேச நண்பராக இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்புடன் உரையாடக் கூடாது. நாம் மருத்துவராகவே மாறி ஆலோசனை வழங்கக்கூடாது. அதேநேரத்தில் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது நம் வேலையல்ல. தீர்வுகளை அளிக்க முயற்சி செய்யவேண்டாம், என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும். அவர் தன்னுடைய பிரச்சினைகளைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது. அவர்களுடைய சிந்தனைக்காக (எடுத்துக்காட்டாக, தற்கொலை எண்ணம்) அவர்களைக் குற்றம்சாட்டவேண்டாம்.

**உளநல முதலுதவியாளர் என்ன செய்யலாம்?**

ஒருவர்உணர்ச்சிக்கொந்தளிப்பில் இருப்பதை ஒருவர் பார்த்தால், அவரை அணுகிப்பேசலாம். அவர்களிடம் உண்மையைச் சொல்லிப்பேசுவதே சரியானது. ஒத்துணர்வை வழங்குதல் வேண்டும். அவர்களையே அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையினை சொல்லவைக்க வேண்டும். உன்னிப்பாக செவி மடுத்தல் வேண்டும். முன்பின் அறிமுகமில்லாதவர்கள் நம்மை நம்பும் அளவுக்கு வார்த்தைகளைக் கவனமாகக் கையாளவேண்டும். அவர் பாதுகாப்பாக உள்ளார் என்பதை உறுதிசெய்தல் வேண்டும். பாதுகாப்பாக உணரவைக்க வேண்டும். அவர்களுக்கு நம்பிக்கையை அளித்தால் மட்டுமே நம்மிடம் அவர்கள் பேசுவார்கள் அதற்கான நம்பிக்கையினை வழங்கவேண்டும். அவர்களின் உணர்வுகளை மதிக்கவேண்டும். முதலுதவி மட்டுமே அளிக்க வேண்டும். தேவைப்பட்டால் உளவியல் மருத்துவர்களைப் பரிந்துரைத்து சிகிச்சையை அவர்களின் சம்மதத்துடன் ஒருங்கிணைக்கலாம். அவர்களுடைய உணர்வுகளை புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். அவர் தீர்வுகளைத் தேட உதவவேண்டும்.

பெரும்பான்மையான உளநலப் பிரச்சினை உள்ளவர்கள் சராசரி புறத்தோற்றத்தில் வெளியில் தெரிவதில்லை. மனச்சோர்வு, பதற்றம், போதைப் பழக்கம் பாலுறவு சார்ந்த பிரச்சினைகள். மாறி வரும் பண்பாட்டுச் சூழலில், பொது மக்களுக்கு குறிப்பாகக் குழந்தைகளுக்கு உளவியல் சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்பு கணிசமாக அதிகரித்திருக்கிறது. இக்காலங்களிலே ஆற்றுப்படாத உளவடுக்கள், அனர்த்தத்தை தொடர்ந்து உளத்தோற்றம் இன்மையால்ஏற்படும்தற்கொலை போன்ற மோசமான நிலைகளுக்கு வழிவகுக்கின்றன. இதை அரசும் மக்களும் கருத்தில் கொண்டு உளவியல் சிகிச்சைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது. ஒரு நபர் தற்கொலை எண்ணங்கள் கொண்டுள்ளதாக, அல்லது பலவீனமாக்கும் உணர்வுகளைக் கொண்டிருப்பதாக, அல்லது நடத்தைப் பிரச்சினைகளான போதைப்பழக்கம் போன்றவற்றைக் கொண்டிருப்பதாக நினைத்தால், அவர்களை ஒரு மனநல மருத்துவரிடம் பரிந்துரைக்கலாம்.

பேரழிவால் ஏற்பட்ட அதிர்ச்சிக்கு பிறகு கவலை, மனச்சோர்வு, மனநிலையில் மாற்றம் போன்றவற்றால் நீங்களோ உங்கள் குடும்ப உறவினர்களோ நண்பர்களோ பாதிக்கப்படலாம். அத்தோடு யோசிப்பதும் வேலை செய்வதும் தூங்குவதும் கஸ்டமாக இருக்கலாம். அதனால் உங்கள் மீது அக்கறையாக இருப்பவர்களிடம் மனம் திறந்து பேசுங்கள். அனர்த்தங்களால் ஏற்படும் உளத்தாக்கங்கள் ஒருபுறமும், அனர்த்தங்களைத் தொடர்ந்து நடைபெறும் களவு, கொலை, கொள்ளை, வன்புணர்ச்சி போன்றவற்றால் ஏற்படும் நெருக்கீடுகள் தொடர் உளத்தாக்கங்களுக்கு காரணமாக அமைகின்றன.

**உளநலச் சமூகப் பணியாளர்கள் பின்வரும் பணிகளில் கவனம் செலுத்துகிறார்கள்**

பாதிக்கப்பட்டவருடைய உணர்வு சார்ந்த, சமூக, பொருளாதார, மனநலத் தேவைகளை மதிப்பிடுதல். பாதிக்கப்பட்டவருக்கும் அவரது குடும்ப உறுப்பினருக்கும் அந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லுதல், அதன் மூலம் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படுகிற சிகிச்சைத் திட்டத்தை அவர்கள் புரிந்து கொள்ள வழிசெய்தல். பாதிக்கப்பட்டவருடைய சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்துதல், அவர்களுக்குப் பயன்படக்கூடிய சமூக வளங்களை அடையாளம் காணுதல். தனிநபர், குழு, குடும்பச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தல். பாதிக்கப்பட்டவர், அவரது குடும்ப உறுப்பினர் மற்றும் நலப் பராமரிப்பு உறுப்பினர்களிடையே தகவல் தொடர்பை மேம்படுத்துதல். பாதிக்கப்பட்டவர் மீண்டும் சமூகத்துடன் ஒருங்கிணைவதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்தல். சுருக்கமாகச் சொன்னால், உளநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்கள், சுமுகமாகக் குடும்ப, சமூக வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு இவர்கள் முக்கியப் பங்காற்றுகிறார்கள்.

உடல்நலத்தை மட்டுமல்ல மனநலத்தையும் காக்க வேண்டிய கட்டாயத்தில் தான் இன்றைய நவீன காலத்தில் இருக்கிறோம். மக்கள் மத்தியில் உளநலம் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல், உளநோய்கள் தொடர்பாக வெளிப்படையான கருத்துப் பரிமாறல்களைமேற்கொள்ளுதல், உளநோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். மக்களைப் பாதுகாத்து உளநோய்களிலிருந்து காத்திட உளநல முதலுதவி வழங்கும் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

மனித வளத்திற்கு ஏற்பட்ட உள நெருக்கீடுகளையும், உள நெருக்கீடுகளால் ஏற்பட்ட அகவடுக்களையும் அகவடுக்களால் ஏற்பட்ட உளத் தாக்கங்களையும் ஆற்றுப்படுத்த வேண்டும். பேறு மிகப்பெரிய பேறாகும். வடக்கு கிழக்குப் பகுதிகளில் காணப்படும் மக்களின் மனநிலை நெருக்கீடுகளுக்கு உள்ளான நிலையிலேயே உள்ளது. இதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆனாலும் முற்றுமுழுதாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவில்லை என்றே கூறவேண்டும்.

மருந்துகளால் குணப்படுத்தக் கூடிய பாரிய உளநோய்களைத் தவிர ஏனைய உளநோய்களை உளவளத்துணை அல்லது உள ஆற்றுப்படுத்தல் சிகிச்சை முறையினால் குணப்படுத்த முடியும். பிரச்சினைகளுக்குத் தாங்களே அதற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாகத் தம்மை மாற்றியமைக்க வேண்டும்.

வடக்குக் கிழக்கு யுத்த காலப் பகுதியில் ஏராளமான மக்கள் தமது உறவுகளை தொலைத்து உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான உளவள ஆலோசனைகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். வடக்குக் கிழக்குத் தெற்கு என்று வேறுபாடு இன்றி, எதிர்காலத்தில் முழு இலங்கையிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதொரு துறையாக உளவளத்துணை ஆலோசனை உள்ளது. உளவளத்துணையானது பரிசோதனை, கற்றல், பயிற்றுவித்தல் போன்ற மூன்று திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்கள் மத்தியில் காணப்படும். சமூக சேவை நிறுவனங்களுடன் இணைந்து சமூகத்தில் வாழுகின்ற மக்களுக்கு சமூகம் சார்ந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். உளவளத்துணை பற்றிய விழிப்புணர்வும் அது பற்றிய அறிவும் நமக்கு இன்றியமையாததாகும். எதிர் காலத்தில் பிரச்சினைகள் அற்ற அல்லது பிரச்சினைக்கான தீர்வினை தாமே ஆராய்ந்து தேர்ந்தெடுக்கக்கூடிய மக்கள் கூட்டத்தைக் கொண்டதொரு நாடாக இலங்கை மாறும் என்று நம்புகிறேன்.

**நிலவன் உளவளத்துணையாளர் மற்றும் உளசமூகப் பணியாளர்.**

# தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்டப் போர்

– என்.சரவணன்

**25.10.2020 வெளியாகிய கட்டுரையின் தொடர்ச்சி...**

திருகோணமலையை மையமாக வைத்தே இலங்கையின் இனப் பிரச்சினையில் இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அரசியல் சதுராட்டம் நடத்தி வந்திருக்கிறார்கள். தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை உடைப்பதாயின் திருகோணமலைக்கு ஊடாகவே துண்டாடவேண்டும் என்கிற திட்டத்தை சுதந்திரம் அடைந்தபோதே சிங்கள அரசாங்கம் போட்டுவிட்டது. கல்லோயா திட்டம் உட்பட பல்வேறு குடியேற்ற திட்டங்களை ஏற்படுத்தி சிங்களவர்களை குடியேற்றி குடிப்பரம்பலின் சம நிலையை சிதைத்தது. 1827 ஆம் ஆண்டு குடித்தொகை கணக்கெடுப்பின்படி திருகோணமலையில் வெறும் 1.53% வீதம் மட்டுமே இருந்த சிங்களவர்கள் 1981 ஆம் ஆண்டு அளவில் 25.4% வீதமாக உயர்ந்துள்ளனர். அதேவேளை 1827 ஆம் ஆண்டு அளவில் 81.52% வீதமாக இருந்த தமிழர்கள் 2007 ஆம் ஆண்டு 28.7% வீதத்துக்கு அதல பாதாளமாக இறங்கியுள்ளனர். திருகோணமலையில் இன்று மூன்றில் ஒரு பகுதியினர் கூட தமிழர்கள் இல்லாத நிலை தோன்றியிருக்கிறது. திருகோணமலை மாவட்டத்தில் ஒரேயொரு பாராளுமன்றப் பிரதிநிதியைத் தெரிவு செய்வது கூட கடினமாக ஆக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட சனத்தொகை இன ரீதியில் 1968 ஆம் ஆண்டில் திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம் கோவில் அமைந்துள்ள திருகோணமலை கோட்டைப் பகுதியை புனித இடமாக அறிவிக்கக்கோரி தமிழரசுக் கட்சி தொடர்ச்சியாக போராடியது. இதற்கு அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா உடன்பட்டிருந்தார். புனித நகராக ஆக்குவதை ஆராய்வதற்கென்று ஒரு குழுவையும் டட்லி நியமித்திருந்தார். தமிழரசுக் கட்சி டட்லியின் அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருந்தது. ஆளுங்கட்சியில் அங்கம் வகித்ததால் அவ் அரசில் திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகவும் இருந்தார். இதன்போது புனிதப் பிரதேசமாக ஆக்குவதை எப்படியும் தடுத்து நிறுத்தியாகவேண்டும் என்று சிங்களத் தரப்பு கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டது. இந்த எதிர்ப்புக்கு அணியை அப்போது தலைமை தாங்கியவர் தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளராக இருந்த சீ.ஈ.கொடக்கும்புர (C.E.Godakumbura). அங்கே இருக்கும் கோகண்ண விகாரையை ஆக்கிரமித்து நிர்மூலமாக்கும் முயற்சி இது என்று அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய கடற்படைத் தளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அவர் சுட்டிக்காட்டினார், திருகோணமலையில் ஒரு இந்து புனிதப் பகுதி அமைவதன் மூலம் இந்திய ஆக்கிரமிப்புப் படையெடுப்புக்கு வழிகோலும் என்கிற பீதியைக் கிளப்பிவிட்டார்கள்.

இத்தகைய சிங்கள பௌத்த தரப்பின் எதிர்ப்பைத் தொடர்ந்து இறுதியில் தேசிய பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி தமிழர்களுக்கு வழங்கிய உறுதிமொழியை பிரதமர் சேனநாயக்க கைவிட்டார். புனித நகராக்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவையும் கலைத்தார். பிரதமர் டட்லி சேனாநாயக்கவின் இந்த நடவடிக்கைகளை அடுத்து அமைச்சர் திருச்செல்வம் பதவியில் இருந்து விலகினார். திருமலை துறைமுகத்தை தேசியமயமாக்குவது தொடர்பிலான விடயத்தின் போதும் திருச்செல்வம் கட்சியாயும் மீறி அமைச்சு பதவியைத் துறக்கத் தயாரானார். ஆனால் மாவட்ட சபைகள் விடயத்தில் டட்லி ஒப்புக்கொண்ட விடயங்களின் காரணமாக தனது விலகலைக் கைவிட்டார். ஆனால் புனித நகர் விவகாரத்தின் போது கட்சியின் சம்மதத்துக்குக் கூட அவர் காத்திருக்கவில்லை. ஜே.ஆர்., சுகததாச போன்றோர் அவரின் விலகலை தடுத்து நிறுத்த முயற்சித்தபோதும் திருச்செல்வம் தனது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சி டட்லி - செல்வா ஒப்பந்தம் அமுலாகும் என்கிற நம்பிக்கையில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக தொடர்ந்து இருந்தது. இறுதியில் அந்த உடன்படிக்கையும் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து டட்லி அரசில் இருந்து தமிழரசுக் கட்சி விலகியதையும் இங்கு நினைவுகொள்வோம்.

இந்த நிகழ்வு குறித்து அன்று தமிழரசுக் கட்சியின் ஏடான "சுதந்திரன்" பத்திரிகையில் இப்படி எழுதப்பட்டிருந்தது. "இந்நாட்டுத் தமிழ் மக்களின் தன்மானத்துக்கு விடுக்கப்பட்ட ஓர் சவால் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இச்செயல் மூலம் திரு டட்லி சேனநாயக்க பௌத்தர்களுக்கும் சிங்களவர்களுக்கும் மட்டுமே தாம் பிரதமராக இருக்கத் தகுதியுள்ளவர் என்பதை ஐயந்திரிபுக்கிடமின்றி எடுத்துக் காட்டிவிட்டார். எனினும் பிரதமரது இந்த நடவடிக்கை ஓரளவு தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் எல்லாம் மெல்ல மெல்ல மங்கி மறைந்து வந்த சிங்கள ஏகாதிபத்தியப் பிரச்சினையின் பின் இன்று பொங்கி பிரவாகிக்கத்தொடங்கியிருக்கிறது. நீறு பூத்த நெருப்பாக இருந்த விடுதலைக்கனல் தமிழ் பேசும் இளைஞர்களின் உள்ளங்களிலெல்லாம் இன்று மீண்டும் வீறுகொண்டு பற்றிப் பிடித்துவிட்டது.

**தொடரும்...**

# கொரோனா

**(எழுத்தாளர் புயல் பெ.ஶ்ரீகந்தநேசன்)**



**25.10.2020 வெளியாகிய கதையின் தொடர்ச்சி...**

கடல் அன்னையும் பொறுமையாக ஆறரை இலட்சமக்களுக்குப்பாதை அமைத்துக் கொடுத்தாள். இடப்பெயர்வில் சாத்தின் தந்தை கனகர் ஒரு கையில் தனது ஐந்து வயது மகள் கமலியுடனும் மற்ற கையில் சாத்துடனும் கைகளில் அருகில் சில பைகளுடன் தனது மனைவி பாக்கியத்துடனும் அக்கினியிற்பட்ட மெழுகு போல மனம் உருக கிளாளியின் கடற்கரையில் திக்கு திசையற்று நின்றபோது. புக்காரா விமானமொன்றுசனக்கூட்டத்திற்கு மேல் மின்னி மின்னி வருகின்றது. கும் இருளில் ஒருவரை ஒருவருக்குத் தெரியாது. கண்ணைக் கட்டி நடு காட்டில் விட்டதைப் போல மக்கள் கூட்டம் அலை மோதியது.

கணப்பொழுது வானத்தில் ஒளி மின்னி மறைகின்றது. பாரிய சப்தம் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர். இரத்த வெள்ளம். "சாத். கமலி, பாக்கியம்மா! எங்க போயிற்றிங்க. தம்பி சாத் தங்கச்சியும் அம்மாவும் எங்கடா?. எனக்கு காலில 'பீஸ்' பட்டிட்டுது நீங்கள் பத்திரம். அடுத்தத்தடவையும்விமானம்வந்து குண்டு போட போகுது கூட்டமா நிற்காம எல்லாம் ஓடிப்போங்கோ. தம்பி சாத் தங்கச்சியையும் அம்மாவையும் கவனமாக கூட்டிக்கிட்டு எங்கவாவது ஓடிப்போ. நா சாகப்போறன் போல எனக்கு இந்த இருட்டுக்குள்ள கண்களெல்லாம் இருட்டுது." இப்படியாக கனகரைப் போல பல ஜீவன்கள் உடலில் காயங்களுடன் உயிருக்குப் போராடிக்கொண்டு தனது உறவுகளுக்காக ஏங்கி தவித்தன.

பிணக்குவியல் மத்தியில் கனகரைப் போல கடுமையாக விழுப்புண் அடைந்தவர்களும் மயங்கியவர்களும் மரண விளிம்பில் தத்தளித்தனர். பிணங்களாகியவர்கள் எதிர்கால கனவுகளுடன் உறங்குவது போல எதுவும் அறியாமல் உறங்கினர். உயிருடன் இயங்கிக் கொண்டவர்கள் தங்களின் உறவுகளை அந்த காரிருளில்தேடி அலையஎத்தனித்தனர். ஆனால், அந்த கருமையான இருளிலும் சனக் கூட்டத்தின் மத்தியில் சிலருக்குச் சாத்தியப்பட்டது. சிலருக்குச் சாத்தியப்படவில்லை. சிலருக்கு சோகத்தையும் மரணத்தையும் மயக்கத்தையும் கொடுத்தன. கனரக வாகனங்களும் பேருந்துகளும் அந்த இடத்திற்கு விறைந்து. கருமையான இருளிலும் மக்களுடன் பிணங்களுடன் விழுப்புண் அடைந்தவர்களும் சில உடைமைகளும் ஏற்றப்பட்டன.

அந்த இடத்தில் மீண்டும், கணப்பொழுது வானத்தில் ஒளி மின்னி மறைகின்றது. பாரிய சப்தம். புகை மண்டலம் கிளம்பியது. ஆனால். அங்கு மக்கள் கூட்டமில்லை. நிலத்தில் ஆநிரைகளும் கடலில் மீன்களும் உயிருக்குப் போராடின. சிறிதுநேரம் அமைதி. வைகறைப் பொழுது தாண்டி காலைப்பொழுது மலர்ந்தது. பறவைகள் அடைக்கலம் கொடுத்த இடத்தைவிட்டு வெளியில் வர மறுக்கின்றன. சேவல்கள் கூவவில்லை. மயில்கள் ஆடவில்லை, மான் கூட்டங்களைக் காணவில்லை. கடல் பொங்கவில்லை, சந்திரன் முகில் கூட்டத்திற்குள் ஒழிந்து விடுகின்றான். வண்ணத்துப் பூச்சிகளைக் காணவில்லை. இடையிடையே ஒரு சில காகங்கள் மட்டும் விட்டு விட்டு கரைந்தன. மூலை முடுக்கும் காடும் மேடும் மனித இரத்த வாடை வீசியது. நண்டுகள் கடற்கரை மணலில் கீறிய படங்களை அலை வந்து கொண்டு போகவில்லை. கடலில் இயந்திர படகுகள் கவிழ்ந்து மாண்டு போன உயிர்கள் மீன்களுக்கு இறையாகிப் போகின. கடலில் மக்களின் உடைமைகள் கணக்கிலடங்காதவை அமிழ்ந்து போயின. கடல் அன்னையும் பூமித்தாயும் மௌனத்தின் மீது காதல் கொண்டன போல மௌனித்துவிட்டன.

"ஐயோ அம்மா! நான் எங்க இருக்கன். எண்ட மனிசி புள்ளைங்களெல்லாம் எங்க. ஐயோ அம்மா! தலையெல்லாம் சுத்துதே" என மயக்க நிலையில் பிதற்றினார். கனகர். "தம்பி சாத் தம்பி சாத். எங்கட போயிற்றிங்க" என்று வாயில் உச்சரித்த. கனகர் அறை மயக்கத்தில் கண்களை விழித்து அங்கும் இங்கும் பார்த்த போது. கட்டிலிலும் நிலத்திலும் காயப்பட்டவர்கள் பலர் மயக்கத்திலும் பிதற்றியவாறும் கிடந்தனர். அதற்குள் தனது உறவுகளைத் தேட முற்பட்ட போது. முல்லைத்தீவு மாங்குளத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் கட்டில்கள் காயப்பட்டவர்களினால், நிரம்பி வழிந்தன.

"ஐயா எழும்ப வேண்டாம். உங்களுக்கு காலில பெரிய பீஸ் பட்டு பெரிய காயம் ஏற்பட்டு கணக்க இரத்தம் போயிருக்கு. படுங்க என்ன வேண்டும்" என்று ஒரு தாதி கைகளில் மருந்து குளிசைகளுடன் கனகரை நோக்கி வந்தாள். "இல்ல தங்கச்சி என்ன பற்றி கவலையில்லை என்ர மனைவி பிள்ளைகள் எல்லாம் எங்க. எப்படியோ? என்ன பாடோ?" என்று கட்டிலில் படுத்தவாறு இரண்டு கண்களிலும் கண்ணீர் மல்க கூறினார்.

"ஐயா அவுங்க எல்லாம் ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் அல்லது கோயில்ல அல்லது யாரும் உங்கட உறவினர்களோடு நல்லா இருப்பாங்க. அவுங்கட பெயர்களைச் சொல்லுங்க தேடிப் பார்க்கச் சொல்றன்." "அவுங்களுக்கு யாரும் உறவினர் கிடையாது. எல்லாம் இந்தியன் ஆமி பிரச்சினை காலத்தில் மண்ணோட மண்ணாக்கிட்டாங்க.

**தொடரும்...**




## அன்ரோயிட் சாதனங்களுக்கான கூகுள் குரோமில் அறிமுகம் செய்யப்படும் புதிய வசதி

மொபைல் சாதனங்களில் ஸ்கிரீன் ஷாட் எடுக்கக்கூடிய வசதி இருப்பது தெரிந்ததே. எனினும் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் திரையில் காண்பிக்கப்படும் பகுதியை மாத்திரமே இவ்வாறு ஸ்கிரீன் ஷாட் எடுக்க முடியும். அதனைத் தொடர்ந்து வரும் பகுதிகளை பிறிதொரு ஸ்கிரீன் ஷாட் ஆகவே எடுக்க முடியும். இணையப் பக்கங்களை ஸ்கிரீன் ஷாட் எடுக்கும்போதும் இதே பிரச்சினையை எதிர்நோக்க வேண்டும்.

எனினும் இப் பிரச்சினைக்கு தீர்வாக Scrolling Screenshot எனும் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது. இவ் வசதியின் மூலம் இணையப் பக்கம் ஒன்றினை முழுமையாக ஸ்கொரல் செய்து ஒரே ஸ்கிரீன் ஷாட்டில் பெற முடியும். ஸ்கிரீன் ஷாட் எடுக்கும்போது குறித்த ஸ்கொரல் செயற்பாடானது தானாகவே இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.




## Vivo அறிமுகம் செய்யவுள்ள புத்தம் புதிய 5G ஸ்மார்ட் கைப்பேசி

சீன ஸ்மார்ட் கைப்பேசி வடிவமைப்பு நிறுவனமான Vivo விரைவில் ஏளைழ S7e எனும் 5G தொழில்நுட்பத்தினைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. இந்நிலையில் குறித்த கைப்பேசி தொடர்பான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இதன்படி குறித்த கைப்பேசியானது 6.44 அங்குல அளவுடையதும், 2400 x 1080 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

அத்துடன் MediaTek Dimensity 800U mobile processor, 4100 mAh மின்கலம் என்பனவும் தரப்பட்டுள்ளன.

மேலும் 32 மெகாபிக்சல்களை உடைய செல்ஃபி கமெரா, 64 மெகாபிக்சல்கள், 8 மெகாபிக்சல்கள் மற்றும் 2 மெகாபிக்சல்களை உடைய 3 பிரதான கமெராக்களையும் உள்ளடக்கியுள்ளது.

எனினும் இதன் சேமிப்பு நினைவகம் மற்றும் பிரதான நினைவகம் என்பவற்றின் தகவல்கள் வெளியிடப்படவில்லை.



## பயனர்கள் நீண்டகாலம் எதிர்பார்த்த வட்ஸ் அப் வசதி விரைவில்

குரல்வழி அழைப்புக்கள், வீடியோ அழைப்புக்கள் என்பவற்றினை இணையவழியாக மேற்கொள்வதற்கும் குறுஞ்செய்திகளை அனுப்புவதற்கும் மிகவும் பிரபலமான செயலியாக வட்ஸ் அப் காணப்படுகின்றது.

உலகெங்கிலும் பல மில்லியன் கணக்கானவர்களால் பயன்படுத்தப்பட்டுவரும் இச் செயலியில் தற்போது மற்றுமொரு வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

அதாவது அழியக்கூடிய குறுஞ்செய்திகளை அனுப்பும் வசதியாகும்.

இவ்வாறு அனுப்பப்படும் குறுஞ்செய்திகள் 7 நாட்களின் பின்னர் தானாகவே அழிந்துவிடும்.

இவ் வசதி அறிமுகம் செய்வது தொடர்பான அறிவித்தல் நீண்ட காலத்திற்கு முன்னர் வெளியாகியிருந்த போதிலும் தற்போதைய தகவலின்படி விரைவில் அறிமுகம் செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி Android, IOS, KaiOS, Web மற்றும் டெக்ஸ்டாக் அப்பிளிக்கேஷன்களில் இவ் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.




## நவம்பர் 12 ஆம் திகதி முதல் டிக் டாக் தடை செய்யப்படுமா?

TikTok

சீன நிறுவனமான பைட் டான்சினால் நிர்வகிக்கப்பட்டு வரும் டிக் டாக் அப்பிளிக்கேஷனை தடை செய்வதற்கு அமெரிக்காவில் நீண்ட நாட்களாக இழுபறி நிலவி வருகின்றது. இந்நிலையில் அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு டிக் டாக்கினை விற்பனை செய்யுமாறு வலியுறுத்தி காலக்கெடுவும் விதிக்கப்பட்டிருந்தது. காலக்கெடு முடிவடைந்த நிலையில் தடை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி மறுத்திருந்தது.

இதே போன்று எதிர்வரும் நாவம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் டிக் டாக்கினை தடை செய்வதற்கு அமெரிக்காவில் உள்ள வர்த்தக திணைக்களம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. எனினும் இந்த தீர்மானத்திற்கும் பென்சில்வேனியாவிலுள்ள நீதிமன்ற நீதிபதியினால் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உலகம் முழுவதும் சுமார் 700 மில்லியன் பயனர்களைக் கொண்ட டிக் டாக் அப்பிளிக்கேஷனுக்கு அமெரிக்காவில் மாத்திரம் 100 மில்லியன் பயனர்கள் உள்ளனர். இவர்களில் 50 மில்லியன் வரையானவர்கள் நாள்தோறும் டிக் டாக் அப்பிளிக்கேஷனைப் பயன்படுத்துபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



**தோற்றவன் புன்னகைத்தால் வெற்றியாளன் வெற்றியின் சுவை இழக்கிறான்.**

**ஹிட்லர்**

# விளையாட்டு செய்திகள்

## பரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர்: காலிறுதிச் சுற்றுக்கு ரபேல் நடால் தகுதி!

பரீஸ் மாஸ்டர்ஸ் (Paris Masters) டென்னிஸ்தொடரில், ஸ்பெயினின் நட்சத்திர டென்னிஸ் வீரரான ரபேல் நடால் (Rafael Nadal ) காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சக நாட்டு வீரரான பாப்லோ கெரேனோ பஸ்டாவை தோற்கடித்து சர்வதேச போட்டிகளில் ஆயிரமாவது வெற்றியை நடால் பதிவு செய்து சாதனை படைத்திருந்தார்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய வீரர் ஜோர்டான் தாம்சனுடன் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நடால் மோதினார். இதில் 6-1, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு நடால் முன்னேறினார்.



## லங்கா பிரீமியர் லீக் போட்டிகளை நடத்த சுகாதார அமைச்சு அனுமதி

சுகாதார அமைச்சு மற்றும் கொவிட் -19 செயற்குழு ஆகியன இவ்வாண்டு லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியை நடத்த ஒப்புதல் அளித்துள்ளதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். எதிர்வரும் நவம்பர் 21இல் இப்போட்டிகளைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முடிவு 'புதிய இயல்புக்கு' ஏற்ப அரசாங்கத்தின் உறுதிப்பாட்டைக் காட்டுவதுடன் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கும் அதே வேளை நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதை உறுதி செய்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

LPL T20

## ஐபிஎல் தொடரில் ரசிகர்களின் விமர்சனத்துக்குள்ளான டெல்லி அணி வீரர்கள்!

நடப்பாண்டிற்கான ஐபிஎல் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் அன்றைய தினம் நடைபெற்ற முதல் பிளேஓப் (Play off )போட்டியில் டெல்லி கெபிடல்ஸ் (Delhi Capitals) அணியை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, மும்பை இந்தியன்ஸ்(Mumbai Indians) அணியானது வெற்றிபெற்றது. இப்போட்டியில் டெல்லி அணியின் , முதல் 3 வீரர்களான பிருத்வி ஷா, ரகானே மற்றும் தவான் ஆகியோர் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

இந் நிலையில் ஒரு ஓட்டத்தினைக் கூடப் பெறமுடியாமல் 3 விக்கெட்டுகளை டெல்லி அணி இழந்தமை ரசிகர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக, அன்றைய போட்டியில் சிறப்பாக விளையாடிய 'மும்பை வீரர் சூர்யகுமார் யாதவ், சர்வதேச போட்டிகளில் விளையாடாமல் ஐபிஎல் தொடரில் 100 போட்டிகளில் பங்கேற்ற, முதல் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியிருந்தார்' என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஐபிஎல் 2020: பெங்களூர் அணியை வீழ்த்தி ஐதராபாத் வெற்றி!

நடப்பாண்டிற்கான ஐபிஎல் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் அன்றைய தினம் நடைபெற்ற வெளியேற்றல் சுற்றில் பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் (Bangalore Royal Challengers) அணியை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி, சன்ரைசர்ஸ் ஐதராபாத் (Sunrisers Hyderabad) இரண்டாவது தகுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஐதராபாத் அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது.இதையடுத்து களமிறங்கிய பெங்களூர் அணி வீரர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். அதிகபட்சமாக டெவிலியர்ஸ் 56 ஓட்டங்களைச் சேர்க்க, 20 ஓவர்கள் முடிவில் பெங்களூர் அணி 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 131 ஓட்டங்களை மத்திரமே எடுத்தது.

இலக்கை நோக்கி களமிறங்கிய ஐதராபாத் அணி வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழக்க , 67 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் அந்த அணி 4 விக்கெட்டுகளை இழந்து திணறியது. ஆனாலும், மறுபுறம் பொறுப்புடன் விளையாடி வில்லியம்சன் 50 ரன்களை சேர்க்க, 19.4 ஓவரில் ஐதராபாத் அணி இலக்கை எட்டியது.



## ஐபிஎல்2020: இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது மும்பை அணி!

நடப்பாண்டிற்கான ஐபிஎல் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் அன்றைய தினம் நடைபெற்ற முதல் பிளேஓப் (Play off )போட்டியில் டெல்லி கெபிடல்ஸ் (Delhi Capitals) அணியை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, மும்பை இந்தியன்ஸ் (Mumbai Indians) அணியானது வெற்றி பெற்றது. இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது.இதையடுத்து களமிறங்கிய மும்பை அணியில், அதிரடியாக துடுப்பெடுத்தாடிய இஷான் கிஷான் மற்றும் சூர்யகுமார் யாதவ் அரைசதம் கடந்தனர்.

இறுதிகட்டத்தில் ஹர்திக் பாண்டியா அதிரடியாக விளையாடி 37 ஓட்டங்களைக் குவிக்க, 20 ஓவர்கள் முடிவில் மும்பை அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 200 ஓட்டங்களைக் குவித்தது. இலக்கை நோக்கி களமிறங்கிய டெல்லி அணியின் முதல் 3 வீரர்கள் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். எனினும் ஓரளவு தாக்குப் பிடித்த ஸ்டோய்னிஷ் 65 ஓட்டங்களைச் சேர்க்க, டெல்லி அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 143 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து தோல்வியுற்றது. இதனையடுத்து மும்பை அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.



# உலக செய்திகள்

## பிரேஸிலில் டிஜிட்டல் முறையில் ஒளிபரப்பப்படவுள்ள ஆடை அலங்கார அணிவகுப்பு!

பிரேஸிலில் கொரோனா அச்சம் காரணமாக ஆடை,அலங்கார அணிவகுப்பு காட்சிகள் அங்குள்ள முக்கிய வீதிகளில் டிஜிட்டல் முறையில் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அந் நாட்டில் Sao Pauloவில் கொண்டாடப்படும் Fashion Week கொரோனாத் தொற்றுக் காரணமாக தற்போது கொண்டாட முடியாத நிலையுள்ளது.

எனவே அந்த நிகழ்ச்சிகளை டிஜிட்டல் முறையில் முக்கிய வீதிகளிலுள்ள சுவர்களில் ஒளிபரப்பவுள்ளனர். இந் நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பிரேஸிலில் தன்னைத் தானே திருமணம் செய்து கொண்ட நபர்!

பிரேஸிலில் மணப்பெண் திடீரென திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்ததால் இளைஞரொருவர் தன்னைத் தானே திருமணம் செய்து கொண்ட விசித்திர சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. பஹியாவைச் சேர்ந்த டியோகோ ரபேலோ (Diogo Rabelo) என்பவருக்கும் விட்டர் புவெனோ (Vitor Bueno) என்ற பெண்ணிற்கும் கடந்த சில மாதங்களுக்கு முன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

இந்நிலையில் டியோகோ மற்றும் ரபேலோ ஆகிய இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதையடுத்து இத் திருமணத்தை ரபேலோ ரத்து செய்ய முடிவெடுத்து அவரிடம் தெரிவித்துள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த டியோகோ மனதை தேற்றிக் கொண்டு பஹியாவிலுள்ள ஒரு தனியார் விடுதியில் தன்னைத்தானே திருமணம் செய்து கொண்டார். இது குறித்து வெளியான புகைப்படங்களும் வீடியோக்களும் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## வடகொரியாவில் பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை!

வடகொரியாவில் பொது இடங்களில் புகைப் பிடிக்கத் தடை விதிக்கும் வகையில் புகையிலை தடைசட்ட மசோதா நிறைவேறியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இச் சட்டத்தை மீறி பொது இடங்களில் புகை பிடிப்போருக்கு அபராதம் விதிக்கப்படுமெனவும் கூறப்படுகின்றது.



இந் நிலையில் வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன் புகை பிடிக்கும் பழக்கம் உடையவர் என்பதால் இச் சட்டத்தால் அவர் இனிவரும் நாட்களில் புகைப் பிடிப்பதைக் கைவிடுவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

## தெளிவான பெரும்பான்மையுடன் வெல்லப்போகின்றோம்— பைடன்

ஜனாதிபதி தேர்தலில் தெளிவான பெரும்பான்மையுடன் வெல்லப்போகின்றோம் என ஜோ பைடன் ஆற்றிய உரையில் இதனை தெரிவித்துள்ளார். வெற்றி குறித்த இறுதி அறிவிப்பு இன்னமும் வெளியாகவில்லை ஆனால் வெளியாகிவரும் தகவல்கள் நாங்கள் வெற்றிபெறுவது உறுதி என்பதை தெரிவிக்கின்றன என அவர் தெரிவித்துள்ளார்.


நாங்கள் இந்த தேர்தலில் வெற்றிபெறப்போகின்றோம்.நேற்று(2020.11.06) முதல் இடம்பெற்ற விடயங்களை பாருங்கள் 24 மணிநேரத்திற்கு முன்னர் ஜோர்ஜியாவில் பின்னிலையில் இருந்தோம்.நாங்கள் தற்போது முன்னிலையில் இருக்கின்றோம் நாங்கள் அங்கு வெற்றிபெறப்போகின்றோம் என பைடன் தெரிவித்துள்ளார். 24 மணிநேரத்திற்கு முன்னர் நாங்கள் பென்சிலவேனியாவில் பின்னிலையிலிருந்தோம்.ஆனால் நாங்கள் அங்கு வெற்றிபெறப்போகின்றோம் எனவும் பைடன் தெரிவித்துள்ளார். நாங்கள் அரிசோனாவில் வெற்றிபெறுகின்றோம் நெவாடாவில் வெற்றிபெறுகின்றோம்.நெவாடாவில் எங்கள் வாக்குகள் இரண்டுமடங்காக அதிகரித்துள்ளன. எனவும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்கா எங்கள் பின்னால் உள்ளது நாங்கள் தெளிவான பெரும்பான்மையுடன் வெற்றிபெறுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






## கொவிட்-19: உலகளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4.96 கோடியாக உயர்வு!

உலக அளவில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4.96 கோடியாக உயர்ந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக கொரோனாத் தொற்றினால் இதுவரை 12,47, 000 மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். எனினும் இப் பாதிப்பிலிருந்து இதுவரை 3.52 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மீண்டும் நியூசிலாந்தின் பிரதமரானார் ஜெசிந்தா!

நியூசிலாந்தின் பிரதமராக ஜெசிந்தா ஆர்டென்(Jacinda Ardern) 2ஆவது முறையாக பதவியேற்றுக் கொண்டார்.

ஒக்டோபர் 17ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற ஜெசிந்தா ஆர்டனின் தொழிலாளர் கட்சி, மொத்தம் உள்ள 120 இடங்களில் 65 இடங்களைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

இதனையடுத்து வெலிங்டனில் நடைபெற்ற விழாவில், நாட்டின் பிரதமராக தொடர்ந்து 2ஆவது முறையாக ஜெசிந்தா ஆர்டென் பதவியேற்றுக்கொண்டார்.



# ஐக்கிய அமெரிக்காவின் 46வது ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவு






# இதுவரை ஐக்கிய அமெரிக்காவை ஆட்சிசெய்த ஜனாதிபதிகளின் விபரம்



கிரேக் வெலிங்டன்–1789–1797, ஜோன் எடாம் –1797–1801, தோமஸ் ஜெஃப்ரிஸன்–1801–1809, ஜேம்ஸ் மெடிசின்–1809–1817, ஜேம்ஸ் மென்ரோயி–1817–1825, ஜோன் கியூன்சி எடாம்–1825–1829, அன்ரு ஜாக்சன்–1829–1837, மார்ட்டின் வன் புரோன்–1837–1841, வில்லியம் ஹென்றி ஹரிஸன்–1841, ஜோன் டைலர்–1841–1845, ஜேம்ஸ் கே பொட்த்–1845–1849, சஸரி டைலர்–1849–1850, மில்லார்ட் பில்மோர்–1850–1853, பிராங்லின் பிரேசி–1853–1857, ஜேம்ஸ் பச்னை–1857–1861, ஆப்ரஹாம் லிங்கன்–1861–1865, அன்ரு ஜோன்ஸ்டன்–1865–1869, உள்யஸ் எஸ் ஜெரான்–1869–1877, ரதபோட் பீ ஹேயஸ்–1877–1881, ஜேம்ஸ் ஏ கெரிபீல்ட்–1881, சேஸ்ரர் ஏ ஆதர்–1881–1885, கிரவர் சலிவியான்ட்–1885–1889–1893–1897, பெஞ்சமின் ஹரிஸன்–1889–1893, வில்லியம் மெக்கன்சி–1897–1901, தெய்டோர் ரூஸ்வெல்ட்–1901–1909, வில்லியம் ஹோட்டெல்ட்–1909–1913, வூட்ரோ வில்சன்–1913–1921, வர்தேன் ஜீ ஹார்டிங்–1921–1923, தல்விங் கூலிங்–1923–1929, ஹோவார்ட் கூவா–1929–1933, பிராங்க்ளின் டீ ரூஸ்வெல்ட்–1933–1945, ஹறி எஸ் சன்சோவர்–1945–1953, டெசைட் டீ சன்சோவர்–1953–1961, ஜோன் எஃப் கென்னடி–1961–1963, லைலொண்ட் பீ ஜோன்ஸ்டன்–1963–1963, ரிச்சர்ட் நிக்சன்–1969–1974, ஜெரால்ட் போர்ட்–1974–1977, ஜிம்மி கார்ட்டர்–1977–1981, ரொனால்ட் ரீகன்–1981–1989, ஜோர்ஜ் ஃ.று.புஷ்–1989–1993, பில் கிளிண்டன்–1993–2000, ஜோர்ஜ் று புஷ்–2001–2009, பராக் ஒபாமா–2009–2017, டொனால்ட் ட்ரம்ப்–2017–2021–01–20 வரை, அடுத்து ஜனநாயகக் கட்சியின் சார்பாக போட்டியிட்ட வேட்பாளரான ஜோ பைடன் அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருப்பதுடன், இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் தோல்வியடைந்திருப்பதுடன், இத்தேர்தல் முடிவுகளை டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 08.11.2020 அன்று வெளியிடப்பட்டது.